A

1

VAY

இலாஹி




திருநெல்வேலி ஜில்லா

பத்தமடை

மெஞ்ஞான சொரூபராகிய செய்குகாமில்

செய்யதுமுகம்மது காசீம் லெப்பை,

ஆலீம் சாஹிபவர்களா லியற்றிய,

# மெஞ்ஞானக்கீர்த்தனை

திருநெல்வேலி நூருல் இஸ்லாம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

...ல 1925-ம் ௵ ஆகஸ்டு ௴ 30-உ

ரூ 0—12—0


G7:417
N25
178880

முபஸ்ஸிலன் முஹம்திலன் முசல்லியன் முசல்லிமன்

மேலப்பாளையம்

## பூலி ஷாஹூமதார்லெப்பை ஆலிம் சாகிபவர்கள்

சொல்லிய சாற்றுக்கவி

கலிவிருத்தம்

கருத்துடனிந்த நூலை கண்ணுற்றுப்பார்த்தபோது
பொருத்தமாய்தன்னைக்காண போந்ததாய் சமைந்த ரத்னம்
சறுத்துடன் பின்னை ஹக்கை சார்ந்திட விளக்கும்நூலாம்
மறுத்துறைபகராஷாஹூமதாரென்போன் கூறினான்

## முகவுரை

அருளாளனு மன்புடையோனுமாய் எவவுலகமுந் தானாய் எவ்வுயிர்க்கும்தாபரமாய் நின்றிலங்குமிறைவனாகிய அல்லாகு சுபுஹானகுஒத்தஆலாவையும் அவனின்திருத்தூதரான நமக்கெல்லாம் நாயகமான முஹம்மதுமுஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களையும அவர்களின்கிளையார்கள் அசுஹாபிகளையும் புகழ்ந்து சலவாத்தும்சலாமும் சொல்லியபின்னர்சகல முஸ்லீமான சகோதரர் களுக்கும் தெரிவித்துக் கொள்வது யாதெனில், சகல சகோதரர் களுக்கும் ஞானத்தைப் புகட்டக்கூடிய விதமாய் கீர்த்தனைப் பதங்களாய்ப் பாடித்தர வேணுமென்று நண்பர்கழிற்பலர் வேண்டிக்கொண்டதற்கிணங்கி இதை பாடி 'மெஞ்ஞானகீர்த்தனையென்று' பேர்கொடுக்கப்பட்டிருக்கிறது. சகோதரர்கள் இதைப்பூராவும்படித்து அதன்படியொழுகி ஈடேற்றம்பெற சர்வதயாபரன் அருள்பாலிப்பானாக ஆமீன்.

பத்தமடை
31—7—25 } செய்யது முகம்மது காசீம் லெப்பை.
ஆலிம்சாகிபு

1
VAY




பிஸ்மில்லா ஹிர்ரகுமா னிர்றஹீம்.

# மெஞ்ஞானக்கீர்த்தனை,

காப்பு.

வெண்பா.

பூவினிற் கந்தம் பூந்தமையும் வாரதுபோ
லாவியமைத்தாளும் ரகுமானென் னாவால்
மெஞ்ஞானக்கீர்த்தனை மேதினியிற்றான்புகல
அஞ்ஞான மகற்றியருள்

ஆதியொளிவா யகுமதிர சூலுதித்த
சோதியினு லெவ்வுலகும் தோன்றிற்றே நீதி
நபியாமவரை நாவிற்றினந் துதித்துக்
கவியாகச் சொல்ல விறை காப்பு.

அறிவுணர்த்து மிரட்டை யாசிரிய விருத்தம்.

ஆலமேய வனன்றி வேறென்று முணராத
ஆரிபுகளாமவர்களும்
அஹதென்ற பொருளதை யகமியமதாகவும்

மருள்கின்றநாதாக்களும்
கோலமே நானென்னு மாங்கார மாய்கையைக்
கூடாதெறிந்தோர்களும்
கொற்றவனுமாயிருந் தகிலமுழுதுமொரு
குடையினிலாளுவோரும்
ஞாலமிசை தாங்கொணுத் தரித்திரமேற்கொண்டு
சங்கடப்பட்டோர்களும்
ஷாஹதனை முதலெடுத்தீமானிசுலாமிற்
சார்ந்தேயமல் செய்குவார்
ரசூலுனை தவறும லெக்கருமங்களுந்
தொல்லுலகில் நாம்செய்யவும்
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோ
னருளிற்றறிவு பெற்றசுதனே 1

உலகமதி லிறகன்றி யுயரப் பறக்கின்ற
ஒலியாகி நின்றபேரும்
உவரிமுழுதும்வாரி யொருமூச்சிலுண்டிடும்
முனைகெங்கு மோர்நொடியிற்
பலகோலமாகவுஞ் சுற்றியேவந்திடினும்
பாதாளம் வரை நுழைந்தே
பார்முழுதுங்கிளறியே பம்பரமாட்டியோர்
பாந்தனையும் வதைசெய்யினும்
ஜலமே நடக்கினு மலைபொடியதாக்கினுஞ்
சற்குருவதா மெங்களின்
செய்யிதிற் றசூல் கலிமாமொழிந்தீமா
னில்லாதார்க்கு மருளில்லையே
தொல்லுலகி லிதையறிந் தீமானிசுலாமைத்
திடர்ந்தமல் செய்து வருவீர்
சுத்தபரிபூரணமாய் பத்தமுடை
யோனருளிற் றறிவுபெற்ற சுதனே 2

காலமதடங்கலுங் கண்ணிமைதிறந்திடாக்
கடுகளவும் துயிலன்றியே

கெவுனம் வேறோட்டாமலோர் நிலமையாக்கிநீ
கங்குல் பகலற வணங்கி
பூலோகமுற்றுமோ ரணுவேனுமிடையன்றி
புகழ்தவஞ் செய்தாகினும்
புண்ணியதர்மங்கள் தானங்கள்கோடியாய்
புவிதல மளித்தாலுமென்
மேலவனுரைத்த மறையேவலை யெடுத்துமே
விலகலைத்தவிர்ந்து நடவார்
ரெக்கிரியை செய்யினுப் பலன்றரவுமாட்டாது
மெய்ம்மறை யோதுகின்ற
சொல்லறிந்தென்னாளும் தொழுகைதனை மறவாமற்
சுகமாயமல்செய்குவாய்
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோ
னருளிற்றறிவு பெற்றசுதனே 3

எத்தனையோ காலமுனைத் தொழுதிறைஞ்சியு
மிடைவிடா நோம்பதாகி
எக்காலமுங் கோடி கோடியாய் நிதிவாரி
யேழைக்களித் திடினு மென்
உத்தமனையென்றுநீ யுலகெலாந் திரிந்
தலைந்தோடியே நற்றலங்கள்
உறவாகச்சென்றுநற் செய்கர்மதர்மமு
மொழுங்காய் நடத்திவிடினும்
பெற்றனைய தந்தைதாய் பெரியோர் தவத்தினர்கள்
பேரின்பமே யடைந்தோர்
பின்னுமுதியோரவர் தாழடியிறைஞ்சியுயர்
பிக்ருய் நடந்துவரினும்
குற்றமற்றென்னரு மெஞ்ஞானத்தவ்ஹீது
குடிகொள்ளார்க் கருளில்லையே
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோ
னருளிற்றறிவு பெற்றசுதனே 4

முன்னேனை முடிவிலாப் பின்னேனை யென்றைக்கு

மோனவடிவா யறிந்து
முழுதும்வெளியானவன் பழுதறமறைந்தவன்
முகம் வடிவமில்லாதவன்

தன்னோன்றனைக்கொண்டு தனித்தவனப்படியே
சகலமுந் தானானவன்
சமயாசமயங்களுஞ் சமயபேதங்களுஞ்
சாரந்திடா துறைகின்றவன்

பொன்னாக நின்றுபணி பலதாகினுமந்த
பொற்களி மில்லாதவன்
பூலோகமுற்றினு மேலாக நானென்று
புணரினு நிலைமை தவறா

துன்னாம மென்னாம மென்றறிவிற்படா
துடராயறிந்து முணர்வாய்
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோ
னருளிற்றறிவு பெற்றசுதனே 5

சாகாமற்செத்தோருஞ் சாகுமுறைகற்றோருஞ்
சாகாப் பதியடைகுவர்
சாகாதகாலென்றும் வேகாத்தலையென்றுஞ்
சர்க்குருவி னுபதேசமும்

போகாபுனலென்றும் மாகமமறிந்தோர்கள்
புகன்றறிவான போதம்
பொன்னுலகமானதும் பொறிபாந்தழ் ந்ரகமும்
புகலாதிருப்ப தறிவோ

ஆகாதபாவமு மாகுமதுநன்மையு
மறியாதிருத்தல் தகுமோ
அகிலாண்டகோடியும் பிர்மாண்டமாகவே
யாசைவையா திருந்தால்

லோகாந்தமுற்றுமது நேர்நெறிதவறிடா
நுட்பங்க ளறிந்திடாயே
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோ
னருளிற்றறிவு பெற்றசுதனே 6

நீராவியானது நீரிலெழுமென்றாலு
நீரிலாதாவி வருமோ
நீரினிலுப்புமது நின்றநிலையறிவும்
நேர்ந்துப்பைக் கண்டபின்பே
பாராவிமேகமாய்ப் படிவிட்டெழும்பியும்
பானவெளிதனி லுலாவி
பக்குவத்துடன்வாய்வு தள்ளியேவாரிதனிற்
பாய்ந்தள்ளி யுண்டுயர்ந்து
நேராகச்சூலாகி யாகாசவெளிதனில்
நின்றுநீர் பொழிந்தோடவே
நெடியபாராவிதான் நீராகப்பார்தனில்
நெகிழ்ந்தோட வந்ததையா
சூராவழிக்காற்று சுற்றிச்சுழட்டியே
சுருண்டுமெதி லடங்குமதுபோல்
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோ
னருளிற் றறிவுபெற்றசுதனே 7

காணொணாக்காட்சியைக் கண்டறிய வேணுமனக்
கண்ணன்றி காண்பதரிதே
காசினியிலறிவாளர் கருத்தரியவல்லமனக்
கண்ணாலே காண்பரென்றால்
காணவொன்றுண்டாய்க் கருத்துக்கிசைந்துமது
கரணவுங் காணவருமோ
காண்பதுங் காணவருகின்றது மொன்றன்றி
ரெண்டென் றுரைப்பதாமோ
தோணுதொன்றானாலுந் தோணவருகின்றதே
சொரூபமற்றுள்ள பேதம்
சொரூபமனந்தம் பெற்ற சிற்சுய நிராமய
நிர்மலமதாகி வருமோ
தோணாதிருக்கின்மனம் பூணாது பூணிலது
சொல்லவுங் கேட்கவருமோ
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோ
னருளிற்றறிவுபெற்ற சுதனே 8

கல்லாரேயாயிடினுங் காசினியிலவர்நல்லோர்
கற்றுங்கருத்தறியார்
கசடரே கசடரினுங் கடைகெட்டமூதேவிகள்
கண்ணில் விழிப்பதரிதே
நல்லாகத்தான்வந்த வழியறியாமல் வயர்
வளர்க்கின்ற நாயல்லவோ
நானீயெனப் பேசுமடமட்டி மூதேவி
நாயினுங் கடைகெட்டதே
எல்லோக்கும் விபரீதமாக வந்தெவரையும்
வரய்மிரட்டாக வசனம்
உல்லாசமாகவும் பேசிபசப்பிவயர்
வளர்க்கின்ற சண்டிமரடு
சொல்லானதை நம்பி பொல்லாத வழிகேட்டிற்
புகுதாமலுனை யறிந்துகொள்
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோர
னருளிற்றறிவுபெற்ற சுதனே 9

கற்றறிவர்நிலை பெற்றறிவர்தெரிந்
துற்றரெனு பதவிவாள்
கண்ணேயமுற்று மவரிருபத மிறையுஞ்சியுங்
காட்சிதந்தாள வென்று
பெற்றுறுமவரென போருளையவரிடம்
பெற்றிடவேணு மதனைற்
பிசகரவவர்மனம்போல் நடந் ததபுடன்
பொறுமையாய்க் கால்மடித்து
கற்றுவே நீயுனது காமிலெனும் கைதந்து
கடாட்சித்து முத்தியருள்வாய்
கண்ணேயென் கண்ணினுண்மணியே பேரின்பவழி
காட்டியே தந்தாழுமென்
றுற்றுர் சரிதைவழி முற்றுமெடுத் ததனுட
னுன்னறிவு ஞானமருள்வார்
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோ
னருளிற்றறிவு பெற்றசுதனே 10

பிறந்தபாலகனாகி நீயொருபிள்ளையாசானிடம்
பேரின்ப மமுதருந்தி
பேசாத மௌனமாந் தந்தைதாய்பிரியாத
பேரழகு வாய்ந்த மதலை
மறைந்தநோய்பிணி யசடுமந்தமொடு
வாராமல் மகிழ்வுசீ ராட்டிவைப்பர்
மாதாபிதாவுமுன் குருவன்றிவேறில்லை
மக்களே யுங்கள்தன்னை
சுரந்தவறிவெனு மன்னம் நிதமூட்டிவளர்ப்பர்காண்
துணைவனு மீயாகுமே
சொல்லுறுதி யவரிடமுண்மை வைராக்கியஞ்
சோர்வன்றி வைத்துணருவீர்
துறத்தல் பொய் கபடுமுதல் சூதுவஞ்சகமெலாந்
தொல்லுலகிலே மறப்பாய்
சுத்தபரிபூரணமாய் பத்தமுடையோ
னருளிற்றறிவுபெற்ற சுதனே 11

பாரெலா முளமங்கை யனைவருந் தாய்தந்தை
மக்களுமாக வெண்ணி
பண்புடன்சரிதை வழியின்பமாய் நடந்துமுயர்
தௌஹீதெடுத்துணர்ந்து
நேரென்றமஃறிபா யோகநிலை முற்றுமதின்
நேர்மையுடனே யறிந்து
நிலையாகச்சாதித்து நிர்விகர்ப்பமெனு
நேர்சரக் கணக்கறிந்து
மேறுவென ஜடலமதிலுற்றதோர் தத்துவ
மனைத்தையு மறிந்துநோக்கி
வேறுமில்லை யொன்றென்ற விபரமதறிந்துநிதம்
விலகாதயிக்கியமாகி
தூரானதூக்கமது துயில்கின்ற நேர்மையுஞ்
சோர் மரணமான தறிவாய்
சுத்தபரிபூரணமாய் ப்த்தமுடையோ
னருளிற்றறிவு பெற்றசுதனே 12

## பரிபூரணக் கண்ணிகள்

ஆதியரும்பொருளே யண்டபகிரண்டமெல்லாம்
மோதும்பலபுகளா யுதிக்கும் பரிபூரணமே 1

சொற்கடங்கா வாழ்வே சுருதிமுடிவில்லானே
எட்கிடையு நீயன்றியே யேதுபரிபூரணமே 2

வானவர்க்கு மெட்டாத வான்பொருளே வள்ளலேயுன்
மோனவருள்மபமரய் முடியும்பரிபூரணவே 3

எங்கெங்குந் தானு யிருந்தசைந்தொசிந்து வரும்
பொங்குந்திருவருளே புண்யபரிபூரணமே 4

எந்தவிதமானு மந்தவிதமத்தனையுஞ்
சொந்தமெனவாழுகின்ற சுகந்தபரிபூரணமே 5

முந்தவருநுகத்தாய் முடிவிலின்சான் கோலமதா
யந்தவழிக்கருளு மஹதே பரிபூரணமே 6

முச்சுடருமொன்றுய் முகம்வடிவொன்றில்லாமல்
அச்சுடருமானவருளே பரிபூரணமே 7

ஆழிக்கடலு மதிலுதிக்கு மலைகளுமாய்
வாழிநுறையாகியெங்கும் வந்தபரிபூரணமே 8

விண்முதலாய்மண்ணும் விளைந்தமலைகடலுங்
கண்ணடங்கா தெல்லாங் கருத்தேபரிபூரணமே 9

ஆசைப்பெருக்கேயென் னகமியமுகின்றுடு
மோசைப்படுமுயிரே யொன்றுபரிபூரணமே 10

நாதமொடுகீதமெல்லா நல்கியுனக்குள்ளதல்லால்
போதமுற வேறுமுண்டோ புண்யபரிபூரணமே 11

உன்னையன்றிவேறுமுண்டோ வெனச்சொன்னபின்பு
யென்னை பெதிலாக்கிவைத்தா யேகபரிபூரணமே 12

இருப்பிடமொன்றில்லாம லேகப்பெருவெளியிற்
றறிப்பிடமுமெட்டாத ஸமதேபரிபூரணமே 13

ஏகப்பெருவெளியி லெங்கெங்குங்காணாமற்
றேகமாய்நின்றேனென் சமதேபரிபூரணமே 14

தாயன்றிபிள்ளை தரிக்குமெனச்சொன்னதுபோல்
நீயன்றிநானா நிலைக்கேன் பரிபூரணமே 15

காமக்கடல்கடந்து கற்பனையுங்கண்ணாகி
வாமமடைதிறந்தேன் வஹதேபரிபூரணமே 16

நாட்டமுனக்கென்று நவின்றபின்பு என்றனக்கு
வாட்டமதுமுண்டோ வஹதே பரிபூரணமே 17

தொட்டாலுமொட்டுமென்று தூரநின்றுபார்த்தாலும்
கிட்டவந்துமுட்டுதையோ கிருபைபரிபூரணமே 18

ஒட்டம்பிடித்தாலு முன்னையன்றிநா னொளிக்கறியேன்
ஆட்டமெல்லா நீயா யறிந்தேன்பரிபூரணமே 19

கட்டிவைத்தாலுமுனைக் காணாதிருக்கவொண்ணா
தெட்டியறியலாமோ யேகபரிபூரணமே 20

யாருமற்றபாவியெனை யாதரிப்பாராருமில்லை
தாருமுமதருளைத் தந்தபரிபூரணமே 21

வித்துமுளைத்து விதவிதம் பணரானதுபோ
லத்துவிதத்துள்ளே யடங்காப்பரிபூரணமே 22

நித்தமுனதருளை நின்னடியார்பெற்றிடுகிற்
சத்திபெறுவர்களெனச் சாற்றும்பரிபூரணமே 23

தெள்ளிவடித்த திறள்முத்தே கர்ப்பகமே
அள்ளியுண்ணத்தொலையா தமுதேபரிபூரணமே 24

வேதமடங்களுக்கு மெட்டாதபெட்டகமே
ஓதிப்புகழ்கின்றமறை யோதும்பரிபூரணமே 25

ஆவீன்றகன்றறிந்துமுலைப் பாலருந்தும்
பாகுபோலுன்னருளைப் பார்த்தேன்பரிபூரணமே 26

எறும்புகடையானைமுத லெவ்வுயிர்க்குமுதளிக்கும்
துரும்புமுதலெல்லாமாய்த் தோன்றும்பரிபூரணமே 27

தத்துவங்களெல்லாந் தனக்கன்றிவேறுமுண்டோ
அத்தனையுமற்றவெந்தன் அருளேபரிபூரணமே 28

முப்பாழும்பாழாய் முடிவுமுதலில்லாம
லெப்பாழுந்தானா யிருக்கும்பரிபூரணமே 29

உயர்ந்தமணியாகியுனக் கொப்புவமையில்லாமற்
றுயர்ந்தும் வியந்துநின்ற சோதிபரிபூரணமே 30

கண்ணேமணியேயென் கண்ணிறைந்தகாரணமே
விண்ணேயென் விண்ணொளியே வியந்தபரிபூரணமே 31

உலகமெங்குந்தானா யுணர்ந்தாலுரைப்பதற்கு
ஊமைகண்டகனவானே னுகந்தபரிபூரணமே 32

நீயாயிருந்ததென்று நிக்ஷயித்தபோதெல்லாம்
நானாயிருந்ததெங்கே நாடுப்பரிபூரணமே 33

நானென்றபேதம் நடவாமலெப்போதுந்
தானென்றுகண்டு தனிப்பேன்பரிபூரணமே 34

ஓசையுனையல்லா லொலிக்காதொருபொழுதும்
பாசையதற்குள்ளே பயின்றாய்பரிபூரணமே 35

இரண்டென்றுசொல்லி நெடுநாளலைந்துளறி
ஒன்றென்றுகண்டு வொடுங்கும் பரிபூரணமே 36

என்றும் நீயென்றே யிருப்பதல்லா லொன்றுமில்லை
கண்டுங்களித்தேனென் கண்ணேபரிபூரணமே 37

சிந்தைதெளியத் தெரிசித்தேனுன்பதத்தை
விந்தையல்லா லொன்றுமில்லை வேண்டுபரிபூரணமே 38

நாமோதயங்களுமே நல்கிடுமுன்பேரருளைத்
தாமாகக்கொண்டேனென் தானேபரிபூரணமே 39

தானாகித்தானுந் தனிப்பே தயங்காமல்நின்று
மோனவருள்குருவே முடிவுபரிபூரணமே 40

ஆசைக்கடங்கா தன்பருக்குமெட்டாத
ஓசையதற்குள்ளமையா வொழுங்குபரிபூரணமே 41

நாதமடங்கலுக்கு நடுவாயுதித்தபொருள்
வேதமடங்கலையும் வேண்டும்பரிபூரணமே 42

எண்ணிக்கையில்லாதிறையே யிறையருளை
நண்ணித்தவங்கள்செய்த நன்றிபரிபூரணமே 43

காணிக்கையாகக் கடல்முழுதும்வைத்தாலும்
பேணிக்கையாகப்பிலக் காதுபரிபூரணமே 44

நலமிடறுமின்னதென நாடிநானறியாமற்
பலம்பெருகவேண்டுமெனப் பார்த்தேன்பரிபூரணமே 45

வாசாமகோசரமாய் வர்ணிப்புக்கெட்டானாய்
தேசோமயானந்தமாய்ச் சேர்க்கும்பரிபூரணமே 46

நிர்மலமாய் நிஷ்களமாய் நிராமயமாய்நின்றிலங்கும்
பிர்மபரிபூரணமாய்ப் பார்க்கும்பரிபூரணமே 47

நினைக்குநினைப்புக்கெல்லா நிகரில்லாதானந்தமாய்
விளைக்கும்விசாரமெல்லாம் வேண்டும்பரிபூரணமே 48

ஒப்புவமைக்கெல்லா மொட்டாபலொட்டிநின்று
செப்புமுறைமையெல்லாஞ் சேர்க்கும்பரிபூரணமே 49

எண்ணுதவெண்ணமெல்லா மெண்ணுமுன்றானறியுங்
கண்ணுங் கருத்தேயென் கல்புபரிபூரணமே 50

எத்திசைக்குமெய்ப்பொருட்கு மெட்டாதநிர்மலமா
யத்திசையுமப்பொருளு மானாய் பரிபூரணமே 51

கற்றறிந்தோன்கல்புங் கருத்துமுனைக்காண்பதற்கு
உற்றறிந்ததெனறு முகந்தபரிபூரணமே 52

பேராசையையகற்றிப் பேரின்பத்தாள்திறந்து
நேராயறிந்துணர்ந்து நின்றபரிபூரணமே 53

ஆவலாயுனைத்தேடி யாரணமெல்லாம்பார்த்தும்
மேவல்விலகல் கண்டெடுக்கும் பரிபூரணமே 54

அண்டசராசரங்க ளானதெல்லாம்பார்த்தாலுங்
கண்டதேகண்டேனென் கண்ணேபரிபூரணமே 55

கண்டதுவும் விண்டதுவுங் காட்சியெல்லாமுன்னுடைய
பண்டிருந்தபாழாய்ப் பதிந்தபரிபூரணமே 56

பரந்தவெளிகளெல்லாம் பகர்ந்தமனுஹறென்று
துறந்துதுறவடைந்தேன் சொல்லுபரிபூரணமே 57

என்னிலெல்லைத்தேடி யெங்கெங்கும்பார்த்தாலும்
மென்னையன்றிவேறயிலை யென்றாய்பரிபூரணமே 58

முன்னைநபிமொழிந்த மூதுரையைத்தானுணர்ந்து
உன்னையுன்னிலுணர்ந்து வுவந்தேன்பரிபூரணமே 59

ஹக்கனுரைத்தசொல்லைக் கண்டறிந்தபின்பதனிற்
சக்கானவெண்ணந் தவிர்ந்தேன் பரிபூரணமே 60

சொக்கமென்று சொல்லுமுன்னே துணிந்துமிகவாசையதாம்
நெருக்குநரகமென்றால் நெகிழ்வேன்பரிபூரணமே 61

ஆசையடங்குதில்லை யங்குமிங்குமெங்குஞ்சென்று
காசைத்திரட்டிவைத்துங் காணேன்பரிபூரணமே 62

வேசியர்மேலாசைகொண்டு வெறிநாய்போலலைந்துகெட்டு
மோசம்போகாமலெனை முடுகுப்பரிபூரணமே 63

ஓசையெழுஞ்சத்த முதிக்குமிடமின்னதென்று
பாசமுடன்காணுதற்குப் பகரும்பரிபூரணமே 64

வாசமதுவெங்கிருந்து வந்ததெனத்தோன்றுமற்
பேசாமற்போகுமிடம் பிரிவோபரிபூரணமே 65

வந்ததுவும்போனதுவும் வள்ளலேயொன்றானால்
லந்தவுயிரப்படியோ வருளேபரிபூரணமே 66

இப்படியறிந்துன்னை யெப்போதுகாணவரு
மப்படியேயாணுணர்வே னஹுதேபரிபூரணமே 67

தேடியுனையலைந்து ஜெகமெங்கும்பார்த்தாலும்
நாடியறியவொண்ணா நவிலும்பரிபூரணமே 68

காணவுனைக்கண்ணுமுண்டோ கண்டகண்ணுமேதுமுண்டோ
தோணவருள்புரிவாய் துலக்கும்பரிபூரணமே 69

நாதனேநீயறியா நண்பர்களும்வேறுமுணடோ
போதனைகள்செய்யுமெங்கள் புண்யபரிபூரணமே 70

பேதலித்தென்மனது பிசகிடாதுன்னருளால்
ஆதரித்தாளாக்கு மன்பே பரிபூரணமே 71

வேதமடங்கலுமே விண்டபடிகண்டுரைக்க
நாதமெனக்குண்டோ நீயன்றி பரிபூரணமே 72

ஆராய்ந்துபாாத்து மகப்படவுமில்லையென
பூராயமெல்லாம் புகன்றாய்பரிபூரணமே 73

வேறாயுனைக்கண்ட வேடிக்கைகளத்தனையுந்
தூராக்கித்தந்த துய்யபரிபூரணமே 74

பாராயோ வென்முகத்தைப் பார்த்துன தருளீந்து
காராயோவையாவென் கண்ணேபரிபூரணமே 75

தாராயோஉன்பதத்தைத் தந்தெனையுன்சொந்தமென
சோராயருள்புரிந்து நிலைக்கும்பரிபூரணமே 76

அண்டசராசரங்க ளானதுநீயல்லாது
கண்டதொன்றுமில்லையெனக் காணும்பரிபூரணமே 77

ஆசைப்பெருக்கேயென் னன்புக்குளின்பமேயுன்
னோசைப்படுமுயிரா யுதிக்கும்பரிபூரணமே 78

பாசவுலகதனிற் பட்டுருண்டு கெட்டலைந்தேன்
நேசனெனைக்கைக்கொள்ளு நிலையம்பரிபூரணமே 79

வாசமலரேயென் வள்ளலேவான்பொருளே
தாசனெனைவைத்தாளுந் தகனமபரிபூரணமே 80

என்னாளுமெப்பொழுது மியன்றமட்டுமுன்னையன்றி
பின்னையுவப்பதற்கு மொன்றும் பிரியாப்பரிபூரணமே 81

தாயெனதுதந்தை சற்குருவுநீயன்றியே
ஆயுட்பொழுதொன்றுமில்லை யண்ணால்பரிபூரணமே 82

நாய்போலலைந்தலைந்து நாடெல்லாஞ்சுற்றிவந்து
வாயாலுமுழர்வதல்லால் வகையோபரிபூரணமே 83

பேயாம்பிசாசென்று பிதற்றிவயிர்பிழைத்து
காயந்தழுன்றதைத்தான் கண்டேன்பரிபூரணமே 84

ஞானக்கடல்மூழ்கி நல்லகறைகாணுமற்
கானலைச்சதமென்று கண்டேன்பரிபூரணமே 85

மோனவருட்கடலில் முங்கிமுத்தைத்தேடாமல்
வானமுழுதுந்தேடி வந்தேன்பரிபூரணமே 86

தானஞ்சிறுவாசல்தனைத் தாள்பூட்டிக்கொண்டுவருட்
பானந்தனையுண்ணப் படித்தேன்பரிபூரணமே 87

அண்ணாக்கையொட்டி யானந்தவெள்ளமதை
யுண்ணாக்கினுண்ண வுவந்தேன்பரிபூரணமே 88

உண்ணாக்கின்மேலே யுயர்ந்தசிறுவாசல்கண்டால்
இன்னாக்கையேத்துவழி யியப்புபரிபூரணமே 89

இன்னாக்கின்கீழே யிழுக்கும்நரம்பதனை
நன்றாக்கயேலாமல் நகட்டும்பரிபூரணமே 90

இந்தக்களையறுத் தெப்போதுந் தான்புகுந்தால்
வந்தகாயம்சொந்தமென வலுக்குப்பரிபூரணமே 91

எந்தநோயும்வந்தணுகா தின்பமுறுமன்பர்கட்கு
கந்தம்பரிமளிக்குங் காயம்பரிபூரணமே 92

அந்தஜடமழியா தன்பருக்கு ஜென்மக்களை
முந்தவேதீர்ந்ததென மொழியும்பரிபூரணமே 93

ஹக்கன்பதந்தனையே காரணவருள்பெருகிநிதம்
சொர்க்கமதில் வாழ்ந்திருக்கச் சொல்லுபரிபூரணமே 94

மக்கந்தனில்வாழு முஹம்மதுர் றசூல்பாதம்
தக்ககெதியென்றுவாழத் தருகும்பரிபூரணமே 95

தருவாயுனைநாடித் தரணிதனிலாசைகொண்ட
நிர்வாகமெல்லாம் நிகழ்ந்தேன்பரிபூரணமே 96

அருவாஹில்நானு மமைந்திருக்கும்போதிலுனை
பிரிவாகக்காணேனுன் பெருகுப்பரிபூரணமே 97

அப்போதமைந்ததொன்றோ ஆனவிதமாவதொன்றோ
இப்போதிருப்பதொன்றோ வியம்புபரிபூரணமே 98

செப்புமுறைபோலவிப்போ சிறந்தரூபமானதினால்
லொப்புவமையாகிடுமோ வோதும்பரிபூரணமே 99

எப்போதுமப்படியே யினிப் போவதப்படியே
கப்புக்கவராகவுனைக் காணும்பரிபூரணமே 100

அடிநடுமுடிவாகி யாகவொன்றாய் நின்றதுநீ
முடிநடுவடியாகி முடிந்தபரிபூரணமே 101

வேதங்கள்நாலும் விரித்துமுறையிட்டதுபோற்
போதமுனைக்கொண்டு புகழ்ந்தேன்பரிபூரணமே 102

வேதமதுவன்றி விண்டதுமற் றுள்ளதெலாங்
காதிலிடாமலெனைக் காக்கும்பரிபூரணமே 103

வேதமதிலுள்ளறிவும் வெளியறிவுமொன்றாக
நீதமாய்க்கொள்வார்மனம் நிலைக்குமபரிபூரணமே 104

எக்கலைக்குமெய்ப்பொருட்கு மெட்டாதவான்பொருளா
யக்கலையுமப்பொருளு மானாய்பரிபூரணமே 105

ஊர்பேருற்றமனு வொன்றுமற்றொன்றியதாய்
நேராகுமத்தனையு நீயேபரிபூரணமே 106

விண்மண்விரிகதிரும் வியப்புமறப்புமன்றி
பண்ணுமதுவாகிநின்ற பண்பேபரிபூரணமே 107

கண்ணிற்புலப்படும்பல் காரணங்களத்தனையு
மெண்ணியுனையல்லா லேலதுபரிபூரணமே 108

நரம்பு தோலெலும்பு தசை நண்ணிணமுதிரமுநீர்
நிறம்புமலக்கூடெனக்கு நிலையோபரிபூரணமே 109

ஆபாசமான வழற்குழியினாசைவிட்டு
நீபாசந்தந்தெனக்கு நிறப்புபரிபூரணமே 110

மன்மதன் விழிமனதை மயக்கும் ஸ்தனமிரண்டி
லென்மனதடாராம விழுக்கும்பரிபூரணமே 111

கூந்தலழகைக்கண்டு குயிலென்றுபுகழாமற்
பாந்தளதுபோல்நினைக்கப் பண்ணுபரிபூரணமே 112

காலிரண்டைக்கண்டு கதலியெனப்போற்றாமல்
வாலிபமதவெறியை வசக்தும்பரிபூரணமே 113

வஞ்சனையும்பொய்யும் வழிகேடுமற்றதெல்லாம்
பஞ்சுநெருப்பதனிற் பாக்தும்பரிபூரணமே 114

ஆசாபாசங்களெனு மகந்தையில்நா னுள்ளடங்கி
மோசம்போகாமலென்னை முத்திபரிபூரணமே 115

நலமிடறுமின்னதென நானறியாப் பேதமையென்
குலமுழுதும் நீயெனவே கொண்டேன்பரிபூரணமே 116

எள்ளளவும்நீயல்லா லில்லையெனக்கண்டவர்க்கு
கொள்ளைசுவனபதி கொடுக்கும்பரிபூரணமே 117

சொல்லப்பொருளுமற்று சும்மாயிருப்பதற்கே
யல்லும்பகலுமெனக் காசைபரிபூரணமே 118

நிர்விகர்ப்பம் நிஷ்டையெல்லாம் நீயேயதுவாக
பெறுவதற்குநானென்று பேசும்பரிபூரணமே 119

மால்தேடி சிந்தை மயங்காமலுன்னருளை
கால்தேடிக்கண்டேனென் றக்கேபரிபூரணமே 120

ஷாருநிலமைதனைத் தவறிக்குபிராகாமல்
மரபுநிலையருள்வாய் மன்னேபரிபூரணமே 121

தொழுகை சக்காத்து நோம்பு சோர்வன்றியுன்பதத்தை
அருளும்பத்தமுடையோனுக் கருளும்பரிபூரணமே 122

உன்னடிமைக்குன்னையல்லா லொதுங்குந்தலம்வேறுமுண்டோ
என்னையடிமையாளும் ஏகபரிபூரணமே 123

பத்தமுடையோனைப் பழிப்பதனிலாக்காமல்
நித்தமுன்பாதந்தந்து நிலைக்கும்பரிபூரணமே 124

என்னாளுமெப்பொழுது மேழையெனையாண்டு
நன்றாகவாக்குமெந்தன் நட்பே பரிபூரணமே 125

முற்றிற்று.

# ஆனந்தக்களிப்பு.

ஆரணம்விளக்குமென் பீரே — ஞானக்
கானந்தமான வருள்குருநீரே — ஆரண

ஆதியிலஹ்றிய்யத்தாகி அரு
ளான அமாவில் மறைவாகிநின்று
ஹாதியாய்நாட்டமுதித்து அந்த
நாட்டமேகுன்னென்றருள் புரிந்தோனே ஆ 1

காரணமாகவுதித்து எங்கள்
ஹாதிமுஹம்மது சோதியாய்வந்து
பூரணமான சன்மார்க்கம் யார்க்கும்
புகட்டித்திருத்திப் புகன்றறிவாக்கி ஆ 2

நாதனுநீதனுநீயே நவ
கோடியாயெங்கு நிறைந்ததுநீயே
வேதமும் வேதத்தினறிவும் நீயே
விஸ்தாரமான விளக்கமும் நீயே ஆ 3

வற்றாப்பெருஞ்செல்வமாகி வரும்
வாழ்வும் பெருங்கீர்த்தி வந்தாலுமென்ன
செத்தாலுன் கூடவருமோ ஜெக
மெங்குந்திரிந்தா லெமன்விடுவாரோ ஆ 4

பெற்றாரும் பெண்டிரும்பிள்ளை பிறவி
பேணுங்கிளையார்களாயிருந்தாலும்
உற்றாருறமுறையாரு முயர்ந்த
ளோரிருந்தாலும் விடுவாரோயேமன் ஆ 5

சாஸ்திரமெல்லாமறிந்து சத
கோடிபுராணஞ்சமயமுங்கற்று
மாத்திரைக்கோலுமெடுத்து மகிழ்
வாகித்திரிந்தாலும் வருவாரே யேமன் ஆ 6

சட்டைதலைப்பாவும்வைத்து தனிக்
கையினிற் கோலுந்தசுபீகுமேந்தி
கட்டையுங்காலினில்மாட்டி கதைகள்
கதறித்திரிந்தாலுங்கட்டுமோஞானம் ஆ 7

பாரில்பலவேசம்பூண்டு பசி
யாலேசருகுகள் பலதையுந்தின்று
ஊரிலிராமலலைந்து மலை
யுச்சத்திலுமெமன் பச்சம்வைப்பாரோ ஆ 8

நித்திரைசற்றுமறந்து தன்னுள்
நினைவைச்சுளுத்தியில் நேராய்நிறுத்தி
அத்திமூச்சையுள்ளாக்கி அதில்
ஆரணக்கலிமாவைப் பூரணமாக்கி ஆ 9

நாதனுய்நின்றுடும்சூட்சம் இரு
நயனத்திடைகாண நல்கிடுமோட்சம்
சாதனையாயறிந்தோர்க்கு சாவு
சாராமலோடிடும் யோகமென்பார்க்கு ஆ 10

சாகுமுன்செத்தறிந்தோர்க்கு அதில்
சாகாக்கால் வேகாத்தலையறிந்தோர்க்கு
வேகமாய்க்காலனைப்போக்கும் இந்த
வெள்ளியானஃதாலமழிவதைநீக்கும் ஆ 11

நாதமுங்கீதமுங்கேட்கும் நடு
நாயகமான நபிகொலுபார்க்கும்
போதனையெப்போதும் நோக்கும் உனது
புண்யசரீரம் புலனழியாதே ஆ 12

தன்னையறிந்திடவேணும் தனி
யோனையறிய வழியதாய்த்தோணும்
உன்னையவனாகப்பூணும் உல
கெங்கும் நீயல்லாலொருமுகமேனும் ஆ 13

பாராதிபூதங்களெல்லை அதைப்
பார்ப்பதும்நீமெத்த கார்ப்பதுந்தொல்லை
சீராயிருப்பதுந்தில்லை சித்தம்
சேர்க்கும்பரவெளி நோக்குமேசொல்லை ஆ 14

கடலுமலையுந்திரிந்தேன் அவனைக்
காணவுபாயங்கள் காணாமலலைந்தேன்
உடலுமுயிருமறிந்தேன் அப்போ
துன்னைப்போலென்னையுகந்துக்கொண்டேனே ஆ 15

எல்லாமறிந்தோருமில்லை என்றும்
ஏதுமறியாருமெங்கேனுமில்லை
கல்லாதறிமூடர்க்கில்லை கதி
கெட்டுத்திரிந்தாலுங் கர்மமேதொல்லை ஆ 16

இறக்கமதிதெரியாமல் நாமும்
என்றுமிருப்போமெனவறியாமல்
துறக்கவழிதெரியாமல் எப்போதுந்
தூக்கஞ்சதமென்றஞ்சோம்பி அலைந்தேன் ஆ 17

தூக்கமுமின்னதெனக்கு யாரும்
சொல்வாருமில்லையதை வெல்வாருமில்லை
நோக்கமறிவதுந்தொல்லை அதி
நுட்பமறிந்தால்வெகுபாரமில்லை ஆ 18

மங்கையராசையைவிட்டு மன
மாய்கையைவிட்டுவழிவாசிபூட்டி
சங்கையாய்ரேசகஞ்செய்து சரி
பூரககும்பகந்தரிப்பிடங்காட்டி ஆ 19

அன்புக்குளன்பாயிருந்த யென
தாண்டகையென்றும் மனதினம்பொருந்த
இன்பத்துக்கின்பமருந்த செய்த
ஏகப்பெருவெளி யோகத்தைப்பாரும் ஆ 20

ஒன்றாயிருப்பது சமாதி யதை
யொன்றன்றி ரெண்டென்றுரைப்பது வியாதி
என்றமறியக்கியாதி வரு
மென்றிரண்டற்று மிகைப்பதனாதி ஆ 21

பஞ்சபூதங்களுமற்று பஞ்ச
பாதகம்விட்டுப் பலனையுஞ்சேர்ந்து
கொஞ்சமுநெஞ்சமஞ்சாது ஞான
போதஞ்செய் வைராக்கியம்பாதந்துஞ்சாது ஆ 22

தத்துவந்தொண்ணூற்றாறென்ற சளத்
தொல்லையும்விட்டுநீ யெல்லையுங்கண்டு
சுத்தசைதன்யமுமுற்று சுகம்
பாராட்டுமானந்த நீராட்டமாகும் ஆ 23

அங்கென்றுமிங்கென்றுமில்லா தமைப்
பானவுலகமதுவன்றியில்லா
தெங்குப்பிரகாசமுஞ் செல்லாய் எனக்
கெங்குநீதோன்றிய தங்கமேநல்லாய் ஆ 24

எல்லாமுமல்லாதிருந்தால் இலங்குஞ்
சுழிமுனையென்பது யெப்படியாச்சு
கல்லாதறிமூடர்பேச்சு கவலை
காட்டுதற்கொருமுறை நாட்டமுமாச்சு ஆ 25

யாருமறியாதபொருளை யெவரு
மறிவாரோ தெரிவாரோ அகமியமருளை
யாருமுனையவன்றன்னி லென்று
பகர்ந்தீர்பரப்பிரமம் பார்ப்பதுமென்ன ஆ 26

பார்க்கின்றவழிதெரியாம லதை
பார்ப்பவராரென்ற பயனறியாமல்
எற்பகாரெனக்குறியாம லெங்கும்
வியாபித்திருக்கும் விதமென்னசொல்வீர் ஆ 27

சொல்லற்றவிடமெங்கேயென்று யானுஞ்
சுருதிமுடிவிடந் தோன்றாமல்நின்று
அல்லும்பகலற்றதலமென் றறிந்
தாசைகொண்டேனதிற் பாசமென்றேனே ஆ 28

அறிந்தபின்னதிற் பாசம்விட்டேன் அந்த
அறிவையுமின்ன தென்றறியவும்பெற்றேன்
பிரிந்திடும்பிரிவையும்விட்டேன் பின்பு
பிலக்கவிட்டதையும் விட்டுவிட்டேனே ஆ 29

எல்லாமழிந்திடுமென்றீர் ஏகன்
இன்பமுகமழியாதென்றுரைத்தீர்
அல்லாவெனுநாமமென்றீர் அதை
யாருரைத்தார்களெவரறிந்தார்கள் ஆ 30

முகமென்றருஹூல்குதுசி முடிவு
மூலமென்றீர் சுளிமுனையாகுமென்றீர்
அகமியமிருவிழிகிடையாம் அது
வாகுமென்றீர் வழியேகுமென்றீரே ஆ 31

வழிசென்றதினுதிப்பாகி வரும்
வகையானறாஹைத் துகையாகநோக்கி
நெளியாமல்நின்றதிலறிந்து நெறி
நீதமறிந்தோர் கெதியதில்விண்டு ஆ 32

விண்டபடிகண்டுசென்று அதின்
விபரமறிந்தோர்க்குவேணதுகன்று
என்றுமிருப்பார்களென்று எனக்
கேகமாயிருப்பதை யெடுத்துரைப்பீரே ஆ 33

கண்டதைகண்டோமென்றறிய அதிற்
காணுமறிவுகடைத்தேறலாகி
கொண்டதைக்கொன்றுவிடாமல் யானுங்
கூத்தாடிக்கூத்தாடிக் கூடிக்கொண்டேனே ஆ 34

கண்டதுங்காண்பதும்யாரு ரெண்டும்
கடைசியிலொன்றென்ற காரணம்பாரும்
விண்டதையதில் நன்றாய்ச்சேரும் அதை
விரித்துரைக்கின்ற விபரமும்நேரும் ஆ 35

நாமமுமெப்படியாச்சு அதை
யார்காண்மொழிந்தது பார்மீதிலாச்சு
காமமுமெவ்விதம்போச்சு அதைக்
கண்டவன்விண்ட கருத்தென்னசொல்லும ஆ 36

மறைவாயிருந்தபுதையல் அது
வாக்குமனதுக்கு மெட்டாதுமெய்யில்
இறையன்றிக்காண்பதுசையல் யானுந்
தினந்தினங்காண திருவருளிப்பீர் ஆ 37

காணவரிதாகுங்கண்ணில் கண்டாற்
கனவாமோ நினைவாமோ காட்சிகளெல்லாம்
தோணவருள்தந்தநாதா இதைச்
சொல்லவரிதானவல்லமையாகும் ஆ 38

நானுயிருப்பதுமென்ன அதில்
நாடியறிவதுந்தேடியதென்ன
தானுயிருப்பதுமென்ன அதைத்
தனதாக்கித்தந்துதவப்புரிவீரோ ஆ 39

நானென்றசொல்லேதுநாமும் நாடிய
நாட்டத்துக்குள்ளாயிருக்குமப்போது
கோனுயிருந்ததுயாரு எனக்குக்
குறித்துநீர்சொல்லிகுணமாக்கிவைப்பீர் ஆ 40

பத்தமடையவே வேண்டு மந்த
பத்தமடைநகர்காசிமின்சொல்லை
பெற்றிடஅறிவருளாகும் அதனால்
பேரின்பவாழ்வு பெருகுமென்னாளும் ஆ 41

பத்தமுமின்னதென்றுரைப்பீர் அதைப்
பலன்பெறவடைகின்றபாங்கதைவிரிப்பீர்
சுத்தமாயநகர்வாழுஞ் சுலையுமான்
சுதனுக்கு ஈஹ்மத்துச்சொரிந்தருள்வீரே ஆ 42

## முற்றிற்று.

## * தோத்திரம் *

### அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வருவீர் வருவீ ரென்குருவே
தருவீர் தருவீ ரின்பமுதை
புருவமூக்கிடைநடுவந்
தருள்வீர்முஹம்மது ஹனீபொலியே 1

அவ்வலஹநியத்தென்னும்பதி
யசுலாமூலந் தனிலிருந்து
ஹ~வின்புதையற்பொருளைவிண்ட
குருவேமுஹம்மது ஹனிபொலியே 2

குருவாம் லாகூத்து பள்ளிதனிற்
கோமான்முஹம்மது மதுரசாவில்
கருவா மில்லைக் கற்றுவந்த
கருணைமுஹம்மது ஹனீபொலியே 3

கருவல் வெள்ளை யிருஇல்மிற்
கருணை அபிய லெனும்பில்லை
இரவலுலகி லிறங்கிச்சொன்ன
விருதயமுஹம்மது ஹனீபொலியே 4

இருதயமுந்தி முண்டகமாம்
எங்கும்பரவின ரூஹுல்குத்தூஸ்
சுருதிவேத நினைவெனவுஞ்
சொன்னீர் முஹம்மது ஹனீபொலியே 5

சொல்லுஞ்செயலு மொன்றாகி
சுருதிரூஹைக் கண்டோர்க்கு
அல்லும்பகலுமாய் நினைவே
யறிவாமென்றீர் ஹனீபொலியே 6

அறிவே ஹறுபுவாயாலமெங்கு
மமர்ந்த மலக்கூத்து குட்சமதை
திருரூஹுல்குதுசாய் காட்டினவென்
தில்லைமுஹம்மது ஹனீபொலியே 7

தில்லிநெல்லை நடுவீடாய்த்
தியங்குமுச்சி மேல்வீடாய்
எல்லையுந்தி கீழ்வீடாய்
இலங்குமுஹம்மது ஹனீபொலியே 8

இலங்குமுலகம் மூன்றதிலு
மேகன்றாஹின் விழிநடுவிற்
கலங்கலன்றிக்காட்டிவைத்த
ஹாதிமுஹம்மது ஹனிபொலியே 9

ஹாதிநாமத்தின்னுதயம்
காத்தமன்பி யாவுலமா
யீதுலகில் மூர்ஷிதமாய்
இருந்தமுஹம்மது ஹனீபொலியே 10

முருஷிதுபீரே யெங்களுக்கு
மூலமுச்சி கண்ணடுவில்
வருஞ்சமகா முஹ்மூதிலுங்கள்
வரவுபார்த்தேன் ஹனீபொலியே 11

பார்க்கவஹ்ததத்து வெவ்வேறாய்
பாரினில் ஜமால் தோன்றியது
கூர்க்கவொன்றி லொடுங்கினது
கூறீர்முஹம்மது ஹனீபொலியே 12

ஒன்றே பலபொருளானதுவே
உற்றுப்பார்க்க வுச்சிமூலம்
கண்டதையொன்று படுத்துவிதம்
காட்டுமுஹம்மது ஹனீபொலியே 13

ஒன்றுபடுத்தும் வகையறியார்க்
குவமைமட்டி மாடென்றும்
முண்டம்ஷெய்தா னென்னும்தலீல்
மொழிந்த முஹம்மது ஹனீபொலியே 14

மொழிஹக்காயிக்கு இல்மறியார்
முடிவுதீங்கி லாகுமென்று
தெளிவெஹ்யாவில் வருஞ் சொல்லைத்
தெரிந்துசொன்ன ஹனீபொலியே 15

தெரிய அஹமதெனும் ரூஹைத்
தினமுந் தெரிசித் தடிபணிதல்
பிரியா வணக்க மாகுமென்றீர்
பீர்முஹம்மது ஹனீபொலியே 16

முஹிய்யத்தீனிபு னியரபி
மொழியைததெரிந் தமல்செய்தவர்கள்
தருதிகாமி லென்றுரைத்த
தந்தைமுஹம்மது ஹனீபொலியே 17

காவது நாசி ஹா நாவாய்
கருத்துறக்கண்யே ஜன்ஜடமாய்
கோபித்துவாசல் செவி சாதாய்க்
கூறுமுஹம்மது ஹனீபொலியே 18

ஹாவுயிர் ஹருகை வலக்கலையாய்
ஹருபுயிர் ஹ்றாவே யிடக்கலையாய்
மாவுயிர் ஹியீயே நடுவாகி
மலர்ந்த முஹம்மது ஹனீபொலியே 19

மீமதை யுச்சி வட்டமதாய்
மேவும் லாமைமக்கண்ணடுவாய்
நாமுற்ற அலிபை மூக்குமுனை
நடுத்தாக்கென்ற ஹனீபொலியே 20

தாகிஸ் காலிகு மஃஷூகாய்
தலைக்கண்ணிடையே முச்சுடராய்
கூர்க்கது மூன்றும் ஸ்தூலமதின்
கோலமென்றீர் ஹனீபொலியே 21

கோலம்பதினறு கோணமெங்குங்
கோர்த்தறா ஹால் குதுசரிய
ஸ்தூலத்திறையை யறுத்தெறிந்த
துய்யமுஹம்மது ஹனீபொலியே 22

அறுத்தெறிந்தபின் றூஹால்குத்தூஸ்
அஹ்மது வடிவாய்க்கண்டுவர
கருத்தக்கண் மூக்கிடையலிபைக்
கவனியென்றீர் ஹனீபொலியே 23

அலிபது மூக்காய் லாம் நாவாய்
அடுத்த ஹே கண் மீம் ஜடமாய்
சலிப்பறக்கேன் செவிதாலென்ற
ஷாகுமுஹம்மது ஹனீபொலியே 24

சாகுமுன்னுஞ் சாகுவதுஞ்
சடலம் நபுசை யறிவதென்று
ஏகன்றாதர் சொற்கருத்தை
எழிதிற்காட்டும் ஹனீபொலியே 25

ஏகன்முஹம்மது கோலமதை
யென்னுள்காணும் விதம்வினவ
மோகித்துவந்து முத்திதந்த
முருஷிது முஹம்மது ஹனீபொலியே 26

முத்தியைப்பெறவே யில்முல்யெக்கீன்
முன்னறிநினைவென் காட்டிவைத்தீர்
சுத்தஐன் யெக்கீன்விபரம்
சொல்லுமுஹம்மது ஹனீபொலியே 27

சொன்னீர் ஐன் யெக்கீன் காட்சி
சூட்சந்தன்னை யறிவதென்றீர்
துன்னும்ஹக்குல் யெக்கீன்விபரம்
துணிப்பீர்முஹம்மது ஹனீபொலியே 28

திண்ணம்ஹக்குல் யெக்கீன்காட்சி
தினப்நீயாமின் ரூபமென்று
எண்ணுங்கமால் யெக்கீனெனக்கு
எடுத்துக்காட்டும் ஹனீபொலியே 29

கேட்டகமால் யெக்கீனதுதான்
கெவி கடல் வான்மலை யூரெங்கும்
தேட்டம் நினைவாகுமென்றீர்
தென்காசிப் பதிவாழொலியே 30

பதியாம் பத்தமடைவாழும்
'டாலன்முஹம்மதுகாசீம் பவம்
துய்தாயகல றப்புடனே
தோழமைசெய்வீர் ஹனீபொலியே 31

முஹம்மது ஹனீபு புத்திரரென்
முருஷிதுபீர்கை யான்பிடிக்க
கம்மதைநீக்கின ஜெம்மலுடன்
கண்டேன்முஹம்மது ஹனீபொலியே 32

ஜெம்மல்குருவதின் திருநாமம்
ஷெய்குமுஹம்மது அப்துல்காதிர்
சம்மதம்பெற்று யிக்கவியைச்
சாற்றினேன் ஹனீபொலியே 33

---

அன்பம் அன்பம் அன்பம்பம் இன்பம் இன்பம் இன்பம்பம்

---

ஓதுங்கலிமா மரமசுலே லொருமூன்றுலக மாய்வளர்ந்து
சோதிக்கனிதேனெழுகுஞ் சூட்சம்ஸ்தூலமென்றறிவீர்
ஆதிஜலால் ஜமாலுடனே யடுக்கரூஹூல்குதுசாகி
ஈதுலவி லாட்டத்திலுள் இலங்கும் ரூஹுஐக்கியமே 1

மேலாங்கலிமா ரூஹாகி மேல்கீழ்நடுவாய் மேவிநின்று
நாலாங்கலைக்கு மெட்டாமல் நாதர்முஹம்மது நடுவாகி
மூலாதாரச்சுடர்மூன்றாய் மூச்சுமுனையில் முடிந்துநின்ற
காலாதாரச்சுழிமுனையில் கடந்தே அஹ்மது ரூஹரிவீர் 2

மேல்கீழ்நடுவாய் மேவிநிற்கு மேலாம்ரூஹின் பதிவீடு
கால்மேல் தலைகீழாய்நிற்குங் கல்பே அருஷுல்லாவாகி
மேல்மேலுங்கி வெளிப்புருதி மேலாம்பதியைக்கடந்துநின்று
கால்மேலான காரணத்தைக் கருதியிருப்போ ரறிந்தவரே 3

அவ்வல்ஹவ்வாய் அம்பரமாய் அமர்ந்துநின்ற அன்பாசாய்
ஒவ்வா நாருய் வெளியாகி யோங்குஞ்சோதிமூலமதாய்
ஹவ்வே ரூஹுல் குதுசாகி குருவாமூலப்பாதமதாய்
முவ்வுலகா யஹ்மதுரூஹ மோதிபாதம் பிறந்தனரே 4

அகுலுல் லவ்வலாய்ப்பிறந்த அஹ்மதுரூஹுல் குதுசாகி
ஜகத சற்குருவானவரே சிந்தையில் ரூஹாய் நின்றிலங்கும்
பகுமா லமுதை யருந்தியபின் பாழாம் விழிநடு பேதமின்றி
திகைப்பாம் திரையது நீங்கிடவே திக்றுதானு யறிவீரே 5

திரையேவெளி ஜலால்மறைவாய் திருவாம் ஜமால் மணமாகும்
நிறையாங்குடி ஜலால்காதம் நிறையாம் ஜமால் விந்தாகும்
கரையாமனு சீரைவருமாய்க் காந்தரூஹூக் கருவினிந்தே
அறைந்தனுதிப்படிபார்த்தா றஹ்மதுரூஹாய்ப் பார்ப்பீரே 6

பாருனுனிமூக் கிடையாகி பார்வையிடையே நடுவாகி
வேரும்வாசிக்கிடைமூச்சை விரிவேமுடிவாய் நுகத்துநின்று
கூறியரூஹு அஹ்மதாய்க் குறிப்பாமூலக்கல்பாசை
நேர்ந்துயிருப்பார் திருக்கதத்தில் நினைப்பு மறப்பு முச்சியதே 7

உச்சிகவுசைன் நடுவாகி யொன்றாய்நின்றமூலமசுல்
பச்சை சிகப்பு கருப்பு வெள்ளை பதிந்தபொன்றுங் குதுசதுவே
இச்சித்திருப்பா ராரிபுக ளேகாந்தத்தின் பேரொளியே
வைத்தகுறி காணிரவுபகல் மறவாதிருப்பீர் மனந்தனிலே 8
மனமேமூலஞ்சுடர் நெருப்பின் மதியாம்புத்தி மாறியொன்றாய்
நினைவேவைத்துல் மஃமூராய் நின்றரூஹு அஹ்மதாய்த்
தினமும் நோக்கிப்பார்த்தவர்கள் திடமாம்பிரியா வணக்கஞ்செய்தோர்
அணுவுமாய்கைமருளுண்டா யறிவேதானாய்ப்பார்த்திடுவீர் 9

தன்னைத்தினமும் பார்ப்பவனைத் தானையறிந்துகொண்டபின்னர்
பின்னுந்தன்னை யறிவதென்று பேசுமனித ருலகிலுண்டோ
அன்னைபிதா வாம்நினைவை யனுதினமு முணர்ந்துவந்தால்
எண்ணமதிப்பி லடங்காம லேகானந்தங்கொண்டிடுவீர் 10

வம்புவீரம்பேசுவானை வழிகெட்ட ஷெய்த்தானுடந்தள்ளி
துன்பமகற்றி இன்பமுடன் துணிந்திருக்குமறிவதென்று
தன்பாலறியு மறிவதனைத் தவமாய்ப்பதித்தோர் நெஞ்சகத்துள்
அன்பாயிருந்துவருபவந்தான் அஹதாயிருக்குமென்றறிவீர் 11
ஆலம்பலவாய்க்கண்டுவந்த அறிவே மருட்டலைத்தள்ளி
கோலமடங்கலொன்றாக்கி குறிப்பாய்க்காணச்சொல்வீரே
மூலமூன்றுமொன்றாகி முடிந்தநினை வென்றறிவீரால்
காலாகாலமெவ்வுயிரும் ஹக்காயிருக்கு மென்றறிவீர் 12

# 1—வது பதம்

மாமுனிவர் காந்தி வேதமந்திரம் மந்திரமென்ற மெட்டு,
இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் ஆதி

பல்லவி

அவ்வல்கலிமாமொழியே அன்பம் அன்பம் அதில்
ஆறிரெண்டெழுத்திலொன்றே இன்பம் இன்பம்

அநுபல்லவி

பன்னிறெண்டு மூன்றெழுத்தா மென்றான் மென்றான் அதில்
பகருமூன்றிலோரெழுத்தே நன்றாம் நன்றாம்
நன்னிலையே றப்பவனாய் நின்றான் நின்றான் அவன்
நகரும்ரூப மற்றதாத்தாய் வென்றான் வென்றான் அவ்வல்
தீனிசுலாம்மூலமொழி யாகிநின்றே அந்த
திருமொழியையோதினவர் யோகியென்றே
மானிடப்பொருளறிகி வேகியென்றே நம்மள்
மார்க்கமிஸ்லாமுறைய தாகிநின்றே அவ்வல்
கலிமாபொருளறிந்தோர் காமில் காமில் அதை
கண்டறியாபேர்களெல்லாம் ஜாஹில் ஜாஹில்
ஒலிமார்களோதினதே ஹாமீம் யாசீன் நன்றாய்
யுணரும்படி கிருபைசெய்வாய் ஆமீன் ஆமீன் அவ்வல்
தானவனாய்நின்றநிலை தங்கம் தங்கம் இதை
சாற்றியறிவித்தநல சங்கம் சங்கம்
ஞானவழிகாசீம்லெப்பை சிங்கம் சிங்கம் சொல்
யாவருக்கும்வேண்டியது பொங்கும் பொங்கும் அவ்வல்

---

# பதங்கள் 2

பல்லவி

தன்னைபணுவாக்கிப்பாருமே— தனித்துநின்ற
தாபரமதாகி வாழுமே

அநுபல்லவி

உன்னையல்லா லொன்றுமேதேறுமே உலகமெங்கு
முதித்ததெல்லா மொன்றாய்த்தோணுமே
முன்னைநாமஹதிய்யத்தில் மூடிருந்ததெப்படியோ
பின்னைநாமப்படியாரும் பிக்குரையறிந்துணர தன்னை

சரணம்

நல்லஷரஹின்முறையே நடந்துகொள்ள
நானெனுமகந்தை மறவே
வல்லவனல்லாதுமில்லையே வணங்கிக்கொள்ள
வகைவிபரமாகு தில்லையே
அல்லா அல்லா வென்றுநாடி அடங்கலதுவாகத்தேடி
சொல்லும் திக்கிறுநாமுமல்ல சுருதியுமுடிந்து நின்ற தன்னை
சொல்லுங்கலிமாமுதலாய் தொழுகைநோம்பு
துடர்சக்காத்து ஹச்சுவரையும்
எல்லாம் நம்மிலஞ்சுபருலா யிருக்கவென்று
ஏசுரப்பில் ஆலமீன் சொன்னாள்
அல்லும்பகலாகமூமீன் அடங்கல்செய்யும்அமலில்
வல்லோனன்றி நாமுமில்லை வஸ்துமில்லைஎன்றெண்ணியே தன்
சொன்னவிபரங்கண்டுதேறுமே சுகமுடைய
துறவறத்தையண்டி வாருமே
நன்னயமாய்ச்சொன்னகவியும் நசீபுள்ளோர்க்கு
நாட்டம் அமல் ரெண்டுமொன்றாகும்
சின்னோன் சிறுவன்காசீம் செய்தகவியத்தனையும்
நண்ணியும் விளக்கமாக நாடியறிந்துணர்ந்து தன்னை

---

## பதம் 3

மய்யல்பெருகுதேனய்யா வென்றமெட்டு

பல்லவி

கருத்தைத்திருத்திக்கொள்ளுங்கள் — ஹபீபிர்சூல்
காட்சிதெரிந்துநல்ல மோட்சமடைவதற்கு கருத்

அநுபல்லவி

பெருத்த ஷாஹதனைப் பேணிநடந்துகொண்டு
பிலமாய்த்தொழுகைநோம்பு தலமாய்சக்காத்துஹச்சு
பேணியீமானையும் பிரியமாயதபுடன்
பிந்தவிடாமலும்நீ முந்தஅமலுஞ்செய்ய கருத்

சரணம்

தன்னையறிந்துகொள்ளுங்கள் தலைவனையும்
தானேயறியும்வகை மானேயதுவாய்த்தோன்றும்
எல்லாமதுவெனத்தோன்றும் ஏகமாயெங்கும்
நல்லாய்நீயாகவேவென்றும் நாயகமான
நபிதன் திருவாக்கின் கவியையறிந்துணர்ந்து
கலைகளாராய்ந்து தேர்ந்து கவின்கள் தூய
ஆரணமுளங்கு மகமியமுற்றும்
பூரணமாகப் பொருந்தியதெளிவாய்
காரணமான ஹபீபிறசூலின்
வாரணமொழியை வருந்தியேதெளிந்து
தாரணையாகத் தனையறிவோர்கள்
நூறதுவான ரூஹையறிந்துணர்ந்து கருத்

ரூஹையறியவேவேணும் நுட்பமதாக
நூருல் இலாஹியதைப் பாருமதுவதன்றி
வேறுமொன்றில்லையேயென்று வினவிக்கொண்டு
வேதாம்பர் வாக்கதைவிண்டு நம்பியதனை
பாருமும்முள்ளேகோலந் தேரும் ரூஹுல்குதுசி
நேருங்காமிலுந் தன்னையும் நிறுத்திப்பார்க்க
நினைவதிற்பொருத்தி நெகிழாமல்நிறுத்தி
மனையெனுமகாமன் மஹ்மூதிலிருத்தி
துணையதில்ஷெய்கைத் துயாரக்கண்டால்
இணையிலாதெனைக் கண்டானெனவுரைத்தார்
அனைவோர்க்குமதுவே யகமியப்பொருளாய்
நனைகழல்நபியும் நமக்கறிவித்த கருத்

தாத்தைக்கொண்டறியவொண்ணு தெனுமொழியைச்
சாற்றிஹபீபிரசூல் போற்றிசிபத்தைக்கொண்டு
புதையலறியலாமென்று அருளியதின்
சிபத்துமோரேழுநமக்கு இரவலாக
தந்தவன்கேட்டபோது தடையன்றிகொடுக்கவேண்டும்
சொந்தம்நமக்கொன்றில்லையே அவனுக்கென்றால்

நாமென்றபேச்சு நாசமாய்ப்போச்சு
நலமுமிடரும் நமக்கானதுபோச்சு
ஆனதால்மிச்சம் அவனென்றேயாச்சு
ஆலமனைத்து மதிலுற்றவஸ்தும்
கோலமனைத்துங் குறிப்புகளெல்லாங்
காலமனைத்தும் ஹக்கெனவறிந்து கருத்

---

## பதம் 4

பல்லவி

ஆஷிக்காகினேன் மஃஷூகுக்குநாதரே—அருள்
தாருங் காரும் வாருமென்முகம் பாருமஹ்மூதே ஆஷிக்

அநுபல்லவி

பாசிக்காகிய குணம்வராமலே பாதுகாத்தருள்வீர்
பகுமறிவதில் வரும்கியாலையும் பறித்தெறிந்திடுவீர்
நேசமாகிய வாசபொற்பதம் நினைவிலெப்பொழுதுங் கனவிலெப்
தாசன்காசிம்பாசமுற்றிட தாசிமேதாரும் ஆ (பொழுதுந்
ஆச பாச நேசநினைவு மறிவுமத்தனையும்
வாசம் வீசிட மலர்சொரிந்திடு மாலமத்தனையும்
கோலமாகிய ஜிசுமடங்கலுங் குறிக்குங்குணமெலாந் தரிக்குமிட
(மெலாம்
அஹதாயுஹதாய்வஹதாய்லெங்கின் றஹக்கைகித்தியமும்
போதமுறுத்தும் புண்ணியகிருபை புகன்றவருள்நாதா
நீதநெறியு நிலைநிறுத்திடு நிலமை தவறாமல்
வேதவொழுங்கின்படி நடத்திடவேண்டுமென்குருவே ஆண்ட
வென்குருவே
காதங்கமழ்தரும் பாதந்தந்தெனைக்காரு மென்குருவே ஆ
பத்தமடையிலுற்ற முஸ்லீம் மூமினத்தனையும்
சுத்தநல்வழி பெற்றிடவருள்புரியுமஹ்மூதே
கற்றபெரிபோர்பாதம் போற்றிட காசிமுக்கருளும் யாசிமேபொ
பொருளும்
பெற்றமுத்திசித்தியாக பேணிக்காத்தருளும் ஆஷிக்

# பதம் 5

பல்லவி

ஆதியில்ரகசியமாகியிருந்த அமா அஹதியத்ததுதானே பாவா
அடங்கியு மறைவான புதையலாயிருந்தது மகமியமதுதானே

அநுபல்லவி

அருவுருவன்றியேபூர்வீகமானதது அஹதிய்யத்ததுதானேபாவா
கருவுருவாகிய காரணமானதை கழறுவன்யான்காசிம் ஆதி

சரணம்

மவுஜூது தாத்ததாய் மறைவாயிருக்கும்போது
மாதவமாய் வெகுபோதவமாய்
மன்னுனுக்கொரு நாட்டமுதித்தபடி
சொன்னுன் குன்னென்றசொல்லதினுல்
சொல்லியசொல்லது நல்ல ஜலால் ஜமால்
நாடியிரண்டுமொன்ருய்
வல்லமையாலொன்று வொன்றினில்மோதியது
வடிவுள்ள முத்தாச்சே ஆதி

முத்ததின்வேர்வை முழுக்கடலாமது
மூஹீத்தெனும் பஹர்துவாம்
பத்தியப்பார்வையால் பகுப்பிரண்டாகவும்
பரந்தது விரிந்தனவே
விரிந்ததுரெண்டும் விரவிக்கலந்திடாமல்
வெள்நீரை யோட்டிவைத்தான்
அறிந்தவெள்நீருக்கு ஆண்டோனுரைத்தநாமம்
ஹயாத்தெனும பெயர்நதியாம் ஆதி

நதிமூன்றுமானதில் நல்லதொன்றப்புமாய்
நடுவினிலின்பமதாம்
கதி நடு நதி ஹயாத்தெனுமுயிர் நம்மையே
ஹக்கனமைத்து வைத்தான்.

பகர்ந்திடுமிக்கவி பத்தமடைநகர்
பாத்திபர் முஹம்மதுகாசீம்
உகந்தவர்சொன்ன தடங்கலுமுண்மையாம்
உறுத்துட னறிந்திடுவீர் ஆதியில்

---

## பதம் 6

பல்லவி

சருணகெதியைநம்பினேன் — திருப்பதம்
அருணதரவை நம்பினேன்

அநுபல்லவி

கருணகரனேவொலி தருணம் தருணம் வர
சிறுவனிதயமகில் செப்பித்முஹியித்தீனே சருண

சரணம்

வேறெனுந்துட்க்கையறுத்தாய் வேற்றுமைசிறு
பாவங்கள் முழுதுந் துலைத்தாய்
நானெனுமகந்தையறுத்தாய் பெரும்பாவம்
நாடிடாமலே யகற்றினுய்
பருக்கில்புகுந்துளறி சிறுக்கினிலாகாமல்
பலன்றரும் ஜெம்ஹினிற் கலந்துறவாகவே
நாதரானவொலி வேதரானவெங்கள்
போதரானகுத்துப் நீதரொலியேயுங்கள் சரு

ஆதபவெளியானகோலமும் இறையரு
ளாகவேநிறைந்த கோலமும்
நாதர்மொழியானபோதமும் நமக்கறிய
நற்பலனைத்தந்தநீதமாம்

நாமரூமவனின்சிற்றும் அவனும் நம்மளின்சிர்றும்
நாயகமேநீங்களதிற் றுயகமதாயமைந்தால்
காணவந்தபொரு ளானதத்தனையும்
தோணவந்திடினும் பூணஉங்கள்பதச் சரு

சொல்லுகலிமாவின்பொருளைத் துலக்கிக்காட்டும்
துன்மையை யறிந்திடாமலே
தொல்லைஹலாக்கானவழியில் தொடர்ந்துசென்று
தோசிகள்போற் கெட்டலைந்தேனே
ஆகமமறியாமலே யோகமுந்தெரியாமலே
தாகமதுதீராமலே சாகமனமாகினின்ற
தாசனுனவெனை மோசம்போகாதறி
வாசம்விசும்படி பாசம்வைத்த வுந்தன் சரு

தொழுகை சக்காத்து நோம்பு ஹச்சுமென்று
சொல்லுமுறைகள் விள்ளுமே
ஒழுகையுணரச்சொல்லுமே என்னுட்டத்தின்
அழுகைக் கவலைத்தீருமே
நாமகோலமின்னதென்று நாடியறியாத பையல்
காமவெறியாலுளன்ற காசீமுக்குமதருளை
தாரும் நற்பதவி சேரும் வழியிலென்னைக்
காரும் கிருபைகண்ணுற் பாருமுமதிரு சரு

---

## "தம் 7

இராகம் புன்னுகவராளி

பல்லவி

பச்சம்வைத்தெனையாளும் இச்சை மஃஷூமகே
பாவியடியேன்செய்த பாவமுழுதுந்தீருமே

அநுபல்லவி

பாவமென்றறியாமல் ஆவலாய்ச்செய்தாலும்
பார்க்குமுன்வெருண்டோடும் நோக்கம்வைத்தாளுமென்பச்சம்

சரணம்

நிலையுள்ளவேதம் நிஜம் நிஜம் நிஜமென
நீதிமுறையும் துஜம் துஜம் துஜமென
நாதனருளும் நயம் நயம் நயமென
நாதாக்களருளிய வேதவாக்கானதை
நாங்களறியாமல் வீண்காலம் போக்கினோம் பச்சம்

சத்தம்பிறந்த ஜிவம் ஜிவம் ஜிவமென
சாகாநினைவுந் தவம் தவம் தவமென்
சாகுமறதி பவம் பவம் பவமென
தத்துவமறியாத பித்தர்களிணங்காத
தனித்துவெளியான தகமையறிந்துணர பச்சம்

நா நீ யெனச்சொல் விடு விடு விடுவென
நாதனொருவன் அடும் அடும் அடுமென
போதமருளைத் தொடும் தொடும் தொடுமென
போதித்துமறியாத வேதத்தைத்தெரியாத
பொல்லாகசடர்க ளெல்லாமகற்றியே பச்ச

ஆருமறியாப் பொருள் பொருள் பொருளென
அறியும்விபர மருள் அருள் அருளென
ஓதியுமறியாத யிருள் யிருள் யிருளதை
யோட்டித்துறத்தி யுணரவழிகாட்டி
நாட்டிலிபுலீசை நாடாமல்வெருட்டியே பச்சம்

---

# பதம் 8

இராகம் கேதார கௌளம் திரிபுடை தாளம்

பல்லவி

எப்பொழுது மென்னினைவு இல்லல்லாவினாட்டம்
ஏதுமில்லை யிணையுமில்லை யென்னறிவின்தேட்டம்

அநுபல்லவி

இசைவானசிபத்துகளு மில்லையென்றே நமக்கு
எல்லாமவன் றனக்குளதென்றே நிலமைப்படுத்தியுநான் எப்

சரணம்

ஆலமெல்லாமமைந்தகோல மவனன்றிவேறில்லை
ஆஷிக்கு மஃஷுகுக்குமவன் றானன்றிவேறில்லை
நானென்றசொல்மறந்து வேறென்றபேச்சிழந்து
நபியுமதுபாத்தும் நமக்கில்லையென்றே யறிந்ததின்பின் எப்

அறிவான அறிவுகளும் அறியுகின்ற நபுசும்
அறிவுமறிகின்றதுவு மொன்றென்றே நீர் பேசும்
பேச்சுமதின் சப்தமுமே பிறித்தறிந்து பாரும்
பிரிக்கமுடியாததுபோல் பேணியுயிர்நிலைகண்டபின் — எப்

செயலடங்கல்நமக்கென்றெண்ணி சிறுக்கினிலாகாமல்
செயல்முழுதுஞ்சீமானுடன் சேர்ந்ததென்றெண்ணாமல்
செயலுஞ்செயலுடையானு மொன்றோரெண்டோசொல்லும்
செயலுடையபொருளறியார் சேர்ந்ததெங்கேயென்றெண்ணியே

ஆதமுதல்மனு ஜின்னுவு மலைகடலுநதியும்
அந்தரம்பாதாளமதினுறை பொருள்களனைத்தும்
வேதமும்வேதாந்தமும் விரிகதிர்மதியுமுடுவும்
விளைந்தயிடம்ஹக்கெனநான் விபரமதையறிந்ததின்பின் — எப்

ஆதமுக்குசுஜூதுசெய்த மலக்குகளுமெவரோ
அகன்றுபோன இபுலீசுவு மவன்மக்களும்வேரோ
ஆதமுக்குசுஜூதுசெய்த தாரகண்டதாரு
அறிவுடையமூமீன்களை யருளுமென கேட்கவும்நான் — எப்

நரகமெனும் சொர்க்கமெனும் ரெண்டுண்டதின்விபரம்
நாமுமதைவினவிடாமல் நல்லமலைச்செய்வோம்
நரகம் சொர்க்கமிரண்டும் நமக்கல்லவோ நீர்சொல்லும்
நபிசொற்படியென்றனக்கு நவிலுமருள்குருவேயினி — எப்

நாட்டமதுந் தேட்டமதும் நமக்குடையதாமோ
நாட்டந் தேட்டமிரண்டுமொன்றாய் ரகுமானுக்கேசெல்லும்
நாட்டம்நமக்கில்லையென்றால் நாமென்பதுபோச்சு
நாயகனுமிச்சமென்று நயந்துதொழுதிறைஞ்சியப்பால் — எப்

ஹக்கும்கல்குமிரண்டானதின் காரணத்தைச்சொல்லும்
ஹக்குநாட்டம்வெளியானது கல்கென்றுச்சுதையா
ஹக்குநாட்டம்நிறப்பமான கருத்தென்னசொல்ஹபீபே
கமாலென்றதில் ஜலால்ஜமாலுங் கலந்திருந்த தறிவாய்நீ. — எப்

ஆண் பெண்ணிரண்டானவிபரம் அறியவேண்டும் ஹபீபே
ஆணுக்குள்ளே பெண்ணுதித்து ஆகப் ஹவ்வாவாச்சே
ஆணானவிபரமென்ன அறியச்சொல்லும் ஹபீபே
அஹதியத்தாயிருந்ததுவு மஹ்மதிய்யா வாச்சுதென்று எப்

வானமென்றும் பூமியென்று மிரண்டானவிபரம்
வடிந்தவடல்நீராவியும் நுரையுமாகிமீழும்
கதிர்மதியுமிரண்டுமொன்றோ காமில்களேநோக்கும்
கதிருக்குள்ளே மதியினொளி கலந்திருந்தகாட்சியென்று எப்

பகலிரவுயென்றிரண்டாய் பகுப்பானதென்ன
பகலிருளிலிருந்தெழுந்த பாகமதுவாச்சு
பகலிரவும் பற்பலதும் பாத்தினிலொன்றாகும்
பாத்தினிலெல்லாமுணர்ந்து பார்த்தறிந்துகொண்டதினால் எப்

பதமாகப்பத்தமடை காசீம்லெப்பைசொன்ன
பாடல்களைப்படித்தறிந்தோர் பலன்பெறுவாரதிசம்
அதிகப்பலன்செறுவதோடு ஹக்கவன்லிக்காவும்
அடைந்துவாளக் கிருபைசெய்வானவனே எப்

---

## பதம் 9

கம் கம் கம் கம்மென—வாசிக்கும்
களபங்கள் நிதம் நிதம் மதமதன கதம்பதன கம்கம்

அநுபல்லவி

வந்தின்பதந்தருவீர் வள்ளலப்துல்
காதிரே யுமதிருவருள்புரிவீர் பொருள்தருவீர் கம்

சரணம்

அஹதியத்துஹதாகி வாஹிதிய்யா
அருவாஹ்ஹூ ஆலமிதால் அஜிசாமாய்
ஆலம் இன்சானாய் வெளிவந்த
அகமிய மறிவருள் மிகத்தருவீர் அகத்தருவீர் கம்

வந்தவழியறிந்து வாசியது
வருந்தலமறிந்ததிற் பொருந்திநின்று
சிந்தையொருமுகமாய் ஷெய்சுவர்
சூரத்தைப்பார்த்தொருகருத்தெரிய வுருத்தெரிய கம்

ஆலமடங்கலுமே ஒருபொரு
ளாய்வந்திமைந்ததின் காரணமுங்
கோலமடங்கலுமே கொண்டுவந்த
குறிப்பறிந்திட வுனதறிவருள்வாய் அருள்தருவாய் கம்

சொல்லுமறிவறிய பத்தமடை
சுலையுமான்புதல்வனும் சுகமடைய
அல்லும்பகலாக வுனா
தன்பெனு மிருபதம் கதம்தருவீர் நிதம்தருவீர் கம்

---

# 10—வது பதம்

ஜெம்தரி யென்றமெட்டு

பல்லவி

அன்பனையுன் தன்தனையறி — றகுமான்
ஆதிவேதமோதியறிந்த அன்பனே

அநுபல்லவி

தன்னையறிந்துந் தனியோனைத்தெரிய
முன்னைநபியு மொழிந்தனர் அறிய அன்பனே

சரணம்

ஞஹையே யறிந்தாலறிவதின் நுட்ப
மான மோன ஞானமாகிய ஞஹையே
வாகாய்நபுசை வழியோடறிந்திட்டால்
வல்லவன்றனையறி வழியதுவாகிடும் அன்பனே

ஆனதால் நீயறிவடிவமாகினுய் நீயு
மாசை பாசை யோசையாகினின் றுனதால்
மவுத்துமுன் மவுத்தான மருத்துவமாமிது
மண்ணுனீ மகிழ்ந்துறவாடின அன்பனே

தன்னை யறியு முறையுணர் அறி
வாகி மோகி தேகியானவுன் தன்னையே
சிபத்தேழுமிறைக்கன்றி நமக்கில்லையென்றறி
மோகிலைபெற்றுத் தாமாயிருந்தவென் அன்பனே

சிந்தையே தெளிந்தானந்தமாகி ஜெக
மெங்கும் பொங்கும் தங்குமாமருட் சிந்தையே
விந்தையதான விளக்கப்பொருளாகி
சந்தையுலகில் ஜனனமாய்வந்தவென் அன்பனே

பந்தமேபவமுற்றுந் தீர்ந்தவா நீர்
வந்து முந்துஞ் சொந்தமென்றதைப் பந்தமே
சுந்தரமாகிய சுலைமான்புதல்வர்
சொற்றகவியதை நற்றவமென்றுணர் அன்பனே

---

## பதங்கள் 11

திந்தி திந்திதிதாம் மென்றமெட்டு

பல்லவி

உந்தி வுந்திபதாம் உந்திய—முதிக்குமுந்தியதாம்

அநுபல்லவி

உந்தியுநிர்த்துளி வொடுக்கம் உந்தியாம்
ஓம் ஓமெனுமொழி ஹாமீமெழுந்தனர் உந்தி

சரணம்

அந்தமாய்வந்துதித்த அருள்நபிசொந்தமாய் கொண்டுவந்த
விந்தைபுருகானின் வேதமயமதாய்
வேதாம்பராம் பயகாம்ப ரெழுந்தனர் உந்தி
எங்கள்நபிக்கரசர் இறையருள் பொங்கும் புகழுசர்
சங்கையாம்தூதரா யெங்கும்பிரகாசராய்
தாம்தாமெனுமொழி தாஹாவெழுந்தனர் உந்தி
வந்துபதந்தருவார் ரசூல்நபி சொந்தகதம்தருவார்
முந்தியுதித்தவர் சிந்தைதெளிவித்தவர்
மோனவழிகாட்டு முஹம்மதெழுந்தனர் உந்தி

அவ்வலொளிவானோர் அஹ்மது வானமீ மில்லாதோர்
செவ்வைகாசீமுக்குச் செல்வங்கொடுத்தவர்
சீமானிலைபெற்ற யாவுமெழுந்தனர் உந்தி

---

## பதம் 12

ஜேங்கு ஜேகு குணஜேம் மென்றமெட்டு

பல்லவி

நாங்கள் நமதெனவே—நினை
வெரும் திரும் வரும் மரும் மனநினை நாங்கள்

அநுபல்லவி

நாங்கள் நம நம தெனவெண சொல்லுஞ்செயல்
ஆகாதெனவுரைத்த அஹ்மதோ வாரார்பார் நாங்கள்

சரணம்

ஆலமதிலுற்றதும் அமரர்முதல்
கோலமனுஜின் ஜுனின் குறிப்புகளடங்கலும் ஆலமதில்
மேலான ஜலால் ஜமால் வெளியொளியாகுமென
ஞாலமதிலுரைத்த நாயகரதோ வாரார்பார் நாங்கள்
ஏதுசெயல் நமக்கும் இறைவனன்றி
எல்லாமவன் செயலே யல்லாது வேருமில்லை ஏதுசெயல்
வாதுகள் கூறிவலுப் பேசியகங்காரமெனும்
நாமென்றிலையாக்கசொன்ன நபியுமிதோ வாரார்பார் நாங்கள்
நானென்ற வகங்காரம் பெருந்துடக்காம்
வேறென்ற சிறுதுடக்கும் வெறுத்தகற்றியும் நீ தான்நானென்ற
நானீயெனப்பேசும் நரர்கள் சிறக்குச்செய்தார்
ஆமென்றருளிச்செய்த நபியுமிதோவாரார் பார் நாங்கள்
பூவினில் வாசமதுபோற் பொருந்தி நின்று
ஏழுசிபத்தும் நமக்கில்லை யெனவறிந்து பூவினில்
ஆவியரும்பொருளாய் ஹக்கோடயிக்கியமாய்
சேருமெனச்செப்பிய செய்யிததோவாரார் பார் நாங்கள்
மாய உலகமதில் மயக்கமுற்று
மன்னோன்றனையறியார் முன்னோர்கள் சொல்லறியார் மாய
காயமெடுத்து வந்த காசீமுக்கருள்புரிய
ராஜருல்லாசரான நபியுமிதோவாரார் பார் நாங்கள்

## 13 பதம்.

வா வா வாடி யென்ற மெட்டு.

பல்லவி.

ஆ ஆ ஆடி ஹக்கனருள் தேடி
உன்னை யுன்னில் நாடிலது வொன்றுமிச்சம் போடி, ஆ ஆ

சரணுநு பல்லவி.

ஏகனிரசூலுக்கிறக்கி வைத்த வேதமதில்
வாகாய் கசமியல்லா வருஞ்சுஸ்விலேயுரைத்தான்
தாஹா நபி சொற்படிதன்னி லோசிப்பீரே ஹக்கை
உன்னில் நேசிப்பீரே ஒளிவாகியாசிப்பீரே ஆ ஆ

கள்ளனிபுலீசின் கலக்கமதை நீக்கியுந்தன்
பள்ளிதனில் வீற்றிருக்கும் பரமானந்தம் பாராயோ
மெள்ளவே யுந்தனையும் வெறுத்துத்தள்ளி விட்டும் அவன்
பொருத்தமதிற்கிட்டும் ஒன்றைந்திருத்தியதில் நட்டும் ஆ ஆ

ஆலமடங்கலுமதிலுள்ள வஸ்த்தடங்கலுமே
மேலோன் வெளியதென விள்ளுமறை துள்ளுதையோ
கோலமதடங்கலுங் குறிப்புடைய தென்று நீ
தரிப்பிடமுமன்று சொன்னயிருப்பிடமு நன்று ஆ ஆ

சொன்னார் ஹபீபிரசூல் சூட்சப்பொருளனைத்தும்
நன்றாக நாமளறிந்துணர வேணுமென்று
பொன்னகருக்கரசைப் போற்றி செய்தார் காசீம் புக
ழேற்றிச்சொன்னார் காசீம் மறைநேர்த்தி சொன்னார் காசீம் ஆ ஆ

---

## 14 பதம்.

பல்லவி.

நானென்பதெது வென்றன்பீரே நபி
நாயகர் சொற்படி நவின்றருள்வீரே புகன்றருள் வீரே

அநு பல்லவி.

ஆதிதன் புருக்கானி லருளியததின்படி
அறிந்து நான் அமல்செய்ய விரிந்தவுலகமதில் நானென்

சரணம்.

என்னை நான் யோசித்துப்பார்க்கில் நான்
ஏதொன்றுமறிகிலே னென்னையன்றிவேறே உன்றனையன்றி
வேறே என்னை நான்
அறிந்திடவொன்றுமில்லை யாகமமறிந்தபின்னர்
ஐயையோ பொய்யுலகில் மெய்யையறிந்திடவும் நானென்
ஸ்தூலமே நானென்று நாடி இந்த
தொல்லுலகினில் வாழுஞ்சுகமதைத்தேடி
அகமதிற்கூடி ஸ்தூலமே
ஞாலமதிற்சூக்குமம் நானென்று பார்த்தாலுங்
கோலமுட்கோலமதாய் குடியோடிப்போகுதே நானென்
என்னுடரகசியம் நீயே இன்சான்
உன்னுட ரகசியம் நானென்று முரைத்தாய்
தானென்றும் நிறைத்தாய் என்னுட
மாற்றிப்பிடிக்கும் வகை மன்னனுரைத்தபடி
சாற்றியகாசீம் லெப்பை போற்றியுரைத்தாராமீன் நானென்.

---

## 15 பதம்.

பல்லவி.

ஜெயமென்னுட்டமேது துரையே ஆ தரிதிமிபமகம
உனையல்லாது நாட்டமெனக்குண்டோ

அனு பல்லவி.

சொன்னார் ஹபீபுறசூல் மன்னனவின்றதுபோல்
மாமறையோதுகின்ற கத்தனித்தன் சித்திமுத்தி நற்றவமுஹம்
(மதுவே
தாம் தரிதிமி பம கம காரிச பபமம காரிச ஜணுத ஜணுதபம
தகுர்த தகுர்ததிகு திகுர்த திகுர்ததிகு டாங்கு டீங்குமறை
போங்குபாங்கதனில் ஜெய

சரணம்

அறிவையறியுமுறையே ஆ தரிதிமிபமகம
அருள்வீரையா ஆகம மறிந்ததுரையே
அறிவுமுதிக்குமிட மடையுமிடமிரண்டும் அஹதியத்திலுத்து
அங்கிருந்திறங்கிவந்து ஆலமின்சானடைந்து
தாம் தரி திமி ஜெய

ஆலமின்சானிலுதித்து ஆதரிதிமிபமகம
அதின்படி மேலேறி அஹதிய்யத்தினிலடையும்
ஆதிதானுரைத்தசொல்லே யோசியுணர்விலேயோ
வேதியரெனப்பேர் சொல்லி
வெள்ளைகொள்ளை செய்யான வெளியறிவையறிந்து
தாம் தரி திமி ஜெய

ஶ்ரீதெனுகாட்டம்பெற்றோர் ஆ தரிதிமிபமசா
முருஷிதோடு நீ காட்டந்தனைக்கேளாய்
நாட்டமறிந்துகொள்ள நபிலதைத்தெரிய
காட்டியே கேட்பீராகில்
காணும்படி காட்டிவைப்பார் ஹாதிகுருவானவரே
தாம் தரி திமி ஜெய

—:0:—

## 16 பதம்.

ஆ. எந்தன் பொங்காரம் மென்ற மெட்டு.

பல்லவி.

ஏனிந்த ஸ்தூலம் இறந்தபின் னேனுக்கிந்தக்கோலம்

அனு பல்லவி.

நானென்பதெதுவென நோக்கில் ஸ்தூலமல்ல
நாயனுரைத்ததை நீ பார் பார் ஏனிந்த

சரணம்.

ஆதியுரைத்த விதம் அறியார்க்கு முரைக்கின்றும்
அல் இன்சானுசிர்றியென் றும் அனசிர்று ஹறூ வென்றும்
ஒதியென்ரகசியம் மனிதனும் அவனின் சிர்று
ரகசியம் நானென்றவதிசயம் பார் பார் ஏனிந்த

இந்த ஸ்தூலமுமண்ணும் எந்தக்கோலமும் மண்ணும்
முந்த ஆதம் படைப்பின் முறையை யறிந்திலேயா
படைத்த வஸ்துக்களெல்லாம் பனுவாகிப் போகுமென்றும்
உடையோ னொருமுகமு மொளியாதுபாக்கியென்றும்
நடையானகுர்ஆனில் நாயனுரைத்திலேயோ
திடமானபெரியோர்கள் செப்பினதும் பார் பார் ஏனிந்த

இந்தஸ்தூலங்கபுரி லெந்தசுகம் பெறவோ
இந்தக்கால்களைக்கொண்டெந்தநகர் போகவோ
இந்தக்கைகளைக்கொண்டெந்தவேலை செய்யவோ
இந்தவாய் நாவினாலெந்த மறையோதவோ
சொந்தமுறையுள்ளார் தோற்றம்செய்யவோ கோலம்
சிந்தைதனில் யோசித்துத்தினமும் நீ பார் பார் ஏனிந்த

அனேகஸ்தூலங்கள் மண்ணிலழியாதிருக்குதென்று
ஆசைமிகவே சொல்லி பாசவலைக்குள்ளாக்கி
அழியாதிருக்க வமல் வழிவேறிருக்குதென்று
ஆகாதவேலைகளை நோகாமற் செய்வதென்றும்
சாகாமற்செத்தோர்க்குப் போகாச்சரீரமென்றும்
புத்தியாய்ச்சொல்வதை நீ யுக்தியாய் பார் பார் ஏனிந்த

பூமியிலிந்த வகை புண்ணியருரைத்த விதம்
சாமி நீ பார்த்துமதின் றன்மையெனமதிப்பாய்
மண்ணின் வயணமதாற் றின்னும் விதமேற்படும்
எண்ணியிவையறியார் புண்யமெனப்புகழ்வார்
எந்தஸ்தூலமேனு மெத்தனை நாளானாலும்
பிந்த அழியுமெனப் பெரியோர் சொல் பார் பார் ஏனிந்த

---

## 17 பதம்.

இராகம் தோடி ஆதிதாளம்.

பல்லவி

நித்தியானந்தத்தைத்தேடு நபி நிலைபெற்றதிந்த வீடு

அனு பல்லவி.

நினைப்பு மறப்புமற்ற நியமங்கள் தனைக்கூடு
நானெனும்பேச்சை நினைப்பதுங்கேடு நித்தியா

சரணம்.

அவ்வலில் நீயிருந்த வாகம்மறியாயோ
அஹ்மதுநபிகோல மானதறிவாயோ
ஹூவ்வதிலடங்கலுங் குடிபதியறிவாயோ
கூடிப்பிரிந்ததின் குறிப்பறிந்திடுவாயோ நித்தியா

ஆதியினுட்ட மடங்கலாயிருந்ததும்
அஹதிய்யத்தானதில் வஹதத்துவானதும்
சோதியாம் வாஹிதிய்யாச் சொரூபமதானதும்
சொல்லவல்லமையற்ற சூட்சங்கள் பார் பார் நித்தியா

கத்தனருள்பெற்ற காமிலைக்கேளு
கலந்துறவாடி நின்றறிந்திட மீளு
சத்தம் பிறந்திடம் சார்ந்து நீ வாளு
சதாநித்தியம் நந்திகொளுதன்னை நீபார் பார் நித்தியா

சரத்தின் கணக்கறிந்து தானமுமூன்றறிந்து
தாஹா நபிசொற்படி தன்னையுமறிந்தால்
சங்கையாம் மோட்சவீடு தங்கையிலகப்படும்
சாற்றிய காசிம் லெப்பை போற்றியுரைத்தபடி நித்தியா

---

## 18 இராகம் தோடி ரூபக தாளம்.

பல்லவி

மான்மதங்கமழ்ந் தேகமே மஹ்மூதாநந்நபி மன்னுணவின்றதை
மார்க்கமாக்கினர் யார்க்கும் பாக்கியமாய் மறையெழில்
மார்க்கமாக்கினர் யார்க்கும் பாக்கியமாய் மஹராஜர் நந்நபி
மார்க்கமாக்கினர் யார்க்கும் பாக்கியமே

அநு பல்லவி

கான்பொழில் நதியழைத்த காரணர்
காசிமெனும் பெயர் தழைத்த பூரணர்
மன்னராம் யாவர்க்கு முன்னராம் அருள்
தன்னலறிவான அணணல் முஹம்மது மான்ம

சரணம்.

கோமானருஷில் கபுசோடேறிட
கொந்தால நபி செந்தாமரைப்பதம்
சீமானுரைப்படி யென்மேற்பட்டிட
சிறப்பும் வலுமையுஞ்செல்வம் பெற்றேனென
ஆமாம்மென அருஷமரர்கூறிட
அன்று முதலருஷமைந்து நின்றிட
நீதராமருள் போதராம் நபி
நாதரா மறை வேதர்முஹம்மது மான்மதங்

மூதுரை யுணர் ஹபீபரசனும்
மொழிந்த சொற்படி தெளிந்தறிந்திட
கோதடர்ந்தபுஜஹில் மடமனம்
கொதித்துக்குபிரர் முகங்கறுத்திட
நாதர் நபியெங்குங்கீர்த்தி பெற்றிட
நல்லிருளமைத்துடனே மாற்றிய
ஹாதியாம் நவ நீதியா மறை
சோதியாய்புகழ் வேதியராமவர் மானமதங்

அந்தரத்தம வாசையினன்மதி
யழைத்துக்காட்டியனேகங்காரணம்
சுந்தரஞ்செறி கஃபாவின் முகட்டிடை
துலங்க விருந்தங்கிறங்கி வலமாய்
சந்திரனேழு தரமுஞ்சுற்றிப்பின்
தன்னுடலொடுக்கி சங்கையுட்புகுந்து
தாழ்ந்திடமதி வாழ்ந்திடப் புகழ்
வந்திடக்குபிர் வீழ்ந்திடச்செய்தனர் மான்மதங்

அங்கிருந்தபீ குபைஸ்மலைக்கேகின
அண்ணலஹமதர் முன்னில் சலாங்கூறி
பொங்கும் நபிவரவெல்லோர்க்கும் புகன்று
பொற்கலிமாச்சொல்லி சட்டையுட்புகுந்து
அங்கிருபிளவாயெழுவரன்படுவானிலுஞ்
சார்ந்துயர்ந்தெங்கு மறிய விளம்பினன்
றார்ந்திட ரெண்டுஞ் சேர்ந்திட காசிம்
வோர்ந்திடமனம் நேர்ந்திடச்செய்த மான்மதங்

---

## 19 இராகம் முஹாரி ஆதி தாளம்.

பல்லவி.

குன்ஹதாத்தானதில் ஹப்பே ஹவதாய்க்
கூறமுடியாதென்றீர் அதை
விண்ணென்று மண்ணென்றும் பெண்ணென்று மாணென்றும்
விளங்காதென விண்டீர்

அநுபல்லவி.

நானென்றும் நீயென்றும் வேறென்றுஞ்சொல்பவர்
நரகத்திலாவாரென்றீர் சொல்ல
பாவனையேது பகர்வதுமேது
பகர்ந்திடுமென்பீரே குன்ஹா

சரணம்.

அஹதிய்யத்தானது வஹதத்து வாஹிதிய்
யானது மெப்படியாம் இதை
விண்டவர் கண்டவர் மேதினி தனிலாரு
விபரஞ்சொல்லென்பீரே குன்ஹா

அவ்வலொளிவி லஹாமதுவானதும்
ஆதம் சமைந்ததுவும் அங்கு
அமரர்களானதும் அஜாசீலுண்டானதும்
அறியச்சொல்லென்பீரே குன்ஹா

அண்டசராசர மெவ்விடமானதும்
யாரிருந்தாக்கியது அதில்
அமைந்திருக்கின்ற தடங்கலுமுற்பத்தி
யானதுஞ்சொல்பீரே குன்ஹா

காண்பதுங்கேட்பதுங்கல்பிலுதிப்பதுங்
கறுதிலொன்றேபலவோ அதின்
விபரமறிய முகம்மது காசீம்
வேண்டுமென நவின்றார் குன்ஹா

---

## 20 இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஏகம்.

பல்லவி.

காதலானேன் காத்தம் நபிமேல் மானே
கருணைபுரிந்தருளும் தேனே

அநுபல்லவி.

ஆதியொளி வெளியாகினின்றிருத்தூதா பொற்பாதா
அஹ்மதானபோதா அருமறை தெளிவேதா யாவுநின்றொளி
ஜெயசீலா அநுகூலா நபிமேலா அருள்பாலா காதலா) (காதா

சரணங்கள்.

மஞ்சுல் கவிகை வள்ளல் மானுக்குப்பிணை நின்ற மகராஜா
மன்னர் ஹபீபரசன் சொன்னமதியழைத்த நேசர்
கந்தங்கமழ் வாசர் சொந்தமறைநேசர் சிந்தை விசுவாசா
யாதியிறை ஆதர்மறை
வேதசொனு மாதவர்மேல் காதலா

ஆதம் நுதலிற்றரித்தோராம் அம்பியாக்கள் வழியில்வந்தோராம்
ஹாஷிம்குலத்துதித்தபேறும் அப்துல்லா விடத்திருந்தசீராம்
ஆமினுரீன்ற வருட்பாலா மூமினுக்காசாளும்சிலா ஹாமீமெனும்
யாசீமெனுந்தாஹாமவர் (பெயர் மேலா
வாசிலான காசிம நபிமேல் காதலா

வாசங்கமழ் பொற்பாதாராம் நேசன் காசீமுக்காதாராம்
பாசம்வைத்தெனையாளும் தாசனெனவெந்நாளும்
சுந்தாஞ்செறிநாதா சுகிர்தகுணநீதா யெந்தனுக்குதவுபோதா
வெகுமறை பகுமுடன் அகமதிற்புக நபிமேல் காதலா

---

## 21 இராகம் சுருட்டி ரூபகதாளம்.

பல்லவி

இந்தச்சந்தையுலகினிலுந்தன் பிறவியினிர்மல
பந்தம் பகையே சிந்திடவாள்வரய் கனி
பாலா குணசீலா கனிபோலா யருள ள அனு
கூலா புகழ்மேலா யிருகாலாய் நடைபெற்றிட வந்தாய் இந்தச்

அநு பல்லவி.

இந்தப்பிறவியினின் சானுனதில் வந்துற்றிடும் வகையானது
சிந்தித்திடிற்றெளிவாகவே யறிவாய் முதல்
நாட்டமதின்றேட்டமன நோட்டம் பிரியாவன்மொழி
வெளியாயருளொளியானபின் றெளிவாய் வருமுத்தானவன்
பார்வையால் ஹூம்மெனவேர்வையால்
கடலதுவாய் நின்றலைமோதி ஜலாலாகி
ஜமாலாய்க் கமாலாய்ச் சேர்ந்துலாவாய் பரமன்
பார்த்திடப்பகுப்பாகி வோடிட இந்தச்

சரணம்.

பகுப்பாயிருநதியானதிற் ஹெகுப்பாயொரு நன்னீர் பின்
வகுத்தானொரு நதியானது கைப்பாம் அது
உருவாகவே யிருநாதமும் பொருவாமலே யொரு வெண்ணதி
தருகாமலே வுருவாகின பெரும்பேறதாய் வருபாவகம்
இந்நதியாம் பஹ்ருல் ஹயாத்துன்னதியாம் இவை
சித்தனருள் பெற்ற நரர்க்குற்ற சிரம்
வைத்தனுயிர் பெற்றிடவு முற்றுமதின்
நற்றவங்களுற்றிட நன்னீதா இந்தச்

இந்த ஸ்தூலஞ்சொந்தம் நமக்கென்றே வாழ்கிற
விந்தை செறிகிந்தையுறை மொழியாம் அது
அறியாமலே தெரியாதவர் பிரிவாகவே யுரையாடுவர்
பெரியோரிதைக்கறுதாருல கெங்குமொரு பொருளாமென
வாதித்தார் வழியோடுரைசாதித்தார் உல
கெங்கும் களி தங்குஞ்செயல் பொங்கும்வழி
யங்கமெனுந் துங்கந்திரிந்தெங்கும்பிர
சங்கமுடலாகி வரும் பேர் இந்தச்

கங்குல் பகலற நின்றநன்மதியே பொன்னிதியே புகழ்
தங்குமருள்பொங்கும் பொருளாய்வரும் நரர்
புகழாகவு மகிழ்வாருலககனமுயரகமாமொழி
ஜெகமாய்கையத் தகனமுறமிகவே செயுங்காசீம் லெப்பை
அருளுரையாம் நன்மறைபொருளுரையாம்
மங்குல் கவிதிங்களுயர் சிங்கமக
ராஜ ராஜப் பிரகாசருல்லாசர் புகழேசர் வெகு
நேசர் விசுவாசர் சொற்படி இந்தச்

---

## 22 இராகம் சகானா தாளம் ஏகம்.

பல்லவி.

உலகஞ்சதமென்றெண்ணாதே எண்ணில்
ஒருக்காலும் நிலை நில்லாதே

அநு பல்லவி.

இகபரமிரண்டு மொன்றுமோ அதை
எண்ணித்திரிந்திடலாமோ — உலகஞ்

சரணம்.

பாசம்வைத்திவ்வுலகிலோடி பணங்
காசு பல கோடியெனத்தேடி
வேசியர் தங்களுடன்கூடிப் பொல்லாத்
தோசியெனப்பேரெடுத்துப்பாடி. — உலகஞ்

சூதுவஞ்சனைசெய்யும் நாடு மிகத்
துன்பம் வருத்துமிங்க வீடு
ஓதும்பெரியோர் நகைத்தகாடு இதை
யுவந்தவர்க் கெப்போதும் வரும் கேடு — உலகஞ்

செத்தவிடக்கென்று முரைத்தார்கள் அதை
தேடுகின்றது மற்றநாய்கள்
கற்ற பெரியோர்கள் நவின்றார்கள் இது
காசீமுஸ்தபா நவின்ற நூல்கள் — உலகஞ்

உலகமிருந்திடில் நீயிராயே அன்றி
நீயிருக்கினு மஃதிராதே
குல்லும் பனுவாகு மென்றுனே நல்ல
குன்ஹாதாத்திருந்திடுந்தானே — உலகஞ்

---

## 23 பாரீஸ மெட்டு.

மங்காத தீபமுச்சுடரே யென்ற மெட்டு.

பல்லவி.

சிந்தித்தஜீவ ரத்தினமே முன்னாளில் வந்த முத்தினமே

அநு பல்லவி.

வந்தநல் லறிவை யூட்டினீர் எங்கெங்கும் கலிமா காட்டினீர்
முந்தவிபு லீசையோட்டினீர் முஹம்மதுற்றசூலுல்லா — சிந்தித்

சரணம்.

வல்லோனொளி வாகியே நின்றீர் வஹ்தத்தானதைக்கொண்டீர்
முச்சுடராம் வாஹிதிய்யென்றீர் முஹம்மதுற்றசூலுல்லா சிந்தித்
எவ்வுலகம் போற்றும் ராஜரே எந்தல்கதீ ஜாவி னேசரே
முந்தியு மமரர் வாசரே முஹம்மதுற்றசூலுல்லா — சிந்தித்

[library stamp, partly legible]

நாசி நுனி நயனமிடையில் நாட்டமஹா மூது முனேயில்
முத்தொளிவை நோக்கிப்பார்க்கையில் முஹம்மதுற்
றசூலுல்லா சிந்தித்
வாசியுதிப் பாகுமதிலே வலம்புரிசங் கோசை தனிலே
மூச்சுதிக்கு ரூஹியதிலே முஹம்மதுற்றசூலுல்லா சிந்தித்
ஆரணர் சுலேமான் மகவாம் ஆனகாசிம் லெப்பை ஆலிமாம்
முத்திகொடுத் தாளவேவேணு முஹம்மதுற்றசூலுல்லா சிந்தித்

---

விருத்தம்.

எவ்வுலகு மெவ்வுயிருந்தானுயிலங்கு நிறைரகுமான்
இவ்வுலகிற் குயிர்களேந் தீமான்பயிரைத் தழைக்கச்செய்ய
மூவ்வுலகம் போற்று மெங்கள் முஹம்மதுற்றசூலுல்லாவை
யெவ்வுயிர்க்கும் ஸ்தாபரமாயமைத்தவித மெடுத்துச்சொல்வாம்

---

## 24 இராகம் ஹிந்துஸ தானி.

பல்லவி.

அஹ தாயிருந்தொளிவாயஹமதுவாய்
நபியுதித்தார் ஹபீபுதித்தார் றசூலுதித்தாரே

அனு பல்லவி.

அவ்வலிற்றெளிவாய் ஆதியினொளிவாய்
அரும்பெருமசுலாய் யாவஸ்துமுதலாய்
ஆண்டோனின்னட்டத் தமைந்தஇலிருந்து
நபியுதித்தார் ஹபீபுதித்தார் றசூலுதித்தாரே அஹதா

அவ்வொளிவானது ஆதம்நுதலில் வந்து
வுவர்மகமகவா யதுபெரும் வழியாய்
ஐம்பத்தோர் தலேமுறை அப்துல்லா நுதலில்
நபியுதித்தார் ஹபீபுதித்தார் றசூலுதித்தாரே அஹதா

யானைக்கலகமுதல் வருடம் ரஜபுமாதம்
ஏற்குமுதற்றெய்தி நோக்கும் வெள்ளியிரா
மதரசாமினர் கற்பக்குவளரையில்
நபியுதித்தார் ஹபீபுதித்தார் றசூலுதித்தாரே அஹதா

அன்றுமுதல் நபிமாரென்றும் நன்மாராயம்
ஆமினார் கனவினின் னாமமுஹம்மதென்
றரைந்தன ரதிசய நவநிதியெனப்போற்றி
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

நான்காமர்தமாமினா நங்கை முழுகாட்டி
நகை வளைதரித்து கஃபாவலஞ்சுற்றி
வரசலில் வரபுத்து வணங்கியே வீழ்ந்திட
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

ஆறாமாத மப்துல்லா மதினா நகர்க்கேக
வாணிபத்தொழில்செய்து வரஅபுவாவினில்
வல்லோன் கட்டளைப்படி மவுத்தாயடங்கிட
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

ஒன்பதாம் ரபீயுல் அவ்வலிற்பனிரெண்டிற்
றிங்களினிரவிற் பெண்கள் மருத்திட
அப்துல் முத்தலீபுக் கஃபாவுக்கேகிட
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

சுவர்க்க மலங்கரிக்க வாசலெட்டுந்திறக்க
சூடாம் நரகடைக்க சொன்னான் நபி பிறப்பால்
ஆலமடங்கலையும் அருவையுஞ் சிங்காரித்து
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

தேவரம்பைகள்போற்றித் திரளாகச்சூழ்ந்திட
தெரிவையாசியாமரியம் மருத்துவஞ்செய்திட
தெருவெங்குமனையெலாம் வாசங்கமழ்ந்திட
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

அமரர்கள் கிண்ணத் தமுதினைப்பருகி
வெண்புட் பறவைகள் வீசியகாற்றால்
வேர்வை நோய்பயமுந் தாகமுந்தீர்ந்தே
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

கோடியா மருணன் கூடிப்பிரகாசிக்க
பாடியா மக்காவின் ஜெம்ரத்தி லொஸ்தாவிற்
போதரபீதாலீபு புகழ்திருமனையில்
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

கிபுலாநேர்முகமாய் சிரசினையுயர்த்தி
சுஜூதைச்செய்திரு தாளினைமடித்து
வலக்கரம்கலிமா விரலினையுயர்த்தி
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுத்தாரே அஹதா

சிரசினிநெய்தேய்த் திருவிழிமையிட்டுக்
கொப்புளுங்கொய்து சுன்னத்துஞ்செய்து
கஸ்தூரி வாசங் கமழு முஹம்மது
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

பாரிசுவணங்கிய நெருப்பன்று தூர்ந்திட
சாவாவெனுங்கடற் றறையோடுவற்றிட
சேருவான்கோட்டை திடீரென்றிடிந்திட
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

கஃபாவிற்புத்துகள் கவிழ்ந்தடிவீழ்ந்திட
கடிபுலிசிம்மா சனமன்றிடிந்திட
மானிலக்குபிரர் மதமறுத்தெரிய
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுரைத்தாரே அஹதா

இவ்வுலகதனி லிரசூலுதித்தது
பவக்கடல்தற்தோர் மரக்கலமதுபோற்
செய்யதுமுகம்மது காசீம்பவமகற்ற
நபியுதித்தார் ஹபீபுதித்தார் ரெசூலுதித்தாரே அஹதா

---

## 25 இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

கண்ணிகள்

உதிக்குமெய்ப்புகழ் துதிக்குங்கண்மணியே காசீமுஹம்ம
தொந்தன்பதத்தைத் தந்தருள்மணியே ரசூ

லாய்வளர்ந்திட மாய்அகன்றிட நோய்பறந்திட சேய்பிறந்திட
நயனமத்தியிற் சயனஞ்செய்மணியே நற்றீபமுச்சுடர்
நாட்டமாமதிற் றேட்டமாய்த்துணியே உதிக்கு
ஆராதரத்தினை சீர்படுத்திடுமே மணிபூரகத்தின்
ஆட்சிசெய்திடுங் காட்சிபார்த்திடுமே மிக
நேசமுற்றவர் வாசம்பெற்றிவர் தோசமற்றவர் பாசம்பற்றினர்
மோட்சமாகியமீட்சிநல்கிடுவார் என்றைக்குநன்மறை
நேமிநாதனுய் காமிலாக்கிடுவார் உதிக்கு
பஞ்சபூதங்களஞ்சையுமறியே அதிசூட்சமான
பாங்கைச்சொல்ல வாங்கிநீயறியே அழ
கானதத்துவம் மானமுத்தமிழ் மோனசத்தியம் ஞானவித்தது
கௌனமாயதை மௌனஞ்சாதித்தே சிங்காரமான
கருத்தடங்கலும் திருத்தம்போதித்தே உதிக்கு
வகுத்ததத்துவம் பகுத்தறிந்திடவே ஆராய்ந்துபார்க்க
வகையிதுவெனத்தொகை தெரிந்திடவே புக
ழாகிவந்திடும் யோகியுந்திரு மோகியுந்திற் பாகிசொந்தமென்
றுனசர்க்குருவான காசீமின்நற்கவிகளான
ஞானமானதின் மோனவாக்கதே உதிக்கு

---

## 26 இராகம் சகாணு தாளம் ஏகம்

ஆதிபெரியோன் றிருத்தூதா யென்றமெட்டு

பல்லவி

எவ்வுலகுக்கும் ரகுமானே என்னை
யீடேற்றும் ரப்பில்ஆலமீனே எவ்வுல்

அநுபல்லவி

ஊவ்விலுறைந்தமைபாக்கோனே எப்போதும்
குல்லுநீயாயிருக்குந்தேனே எவ்வுல்

சரணம்

அல்லும்பகலுமுனைநாடி நான்
ஆஷிக்கு மஃஷூக்காய்ப்பாடி
சொல்லுஞ்செயலுமொன்றுய்க்கூடி நிதம்
துதிக்கும்புகழ்முறையேதேடி எவ்வுல

நினைப்பு மறப்பு மெமக்கேது நீ
யல்லாதிருக்கினி லுண்டோது
நீயென்பதறிந்திடாப்போது நினை
வெப்படியறிவாய் நீயோது எவ்வுல
நீயென்றருஹூறல் குதுசுக்கே நிக
ரொப்புவமையில்லாத வனுக்கே
நினைவுஹயாத்தென்று சொல்வதற்கே எதிர்
மறதிமவுத்தான சொல்லைநோக்கே எவ்வுல
சொல்லும்காசீம்லெப்பை ஆலிமோதுஞ் சுடர்
நினைவேறப்பென வறிபோதும்
எல்லாம்றகுமானெனப்போதம் எங்கும்
ஏகமாயிலங்குஞ் சுகநாதம் எவ்வுல

## 27 இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

கனிந்துவந்தே மாதரமாதங் யென்ற மெட்டு

பல்லவி

தெளிந்துதித்த மாமறைமாமது ரங்கவிபூரணமான
காத்திமுலன்பியாவாம் நபிகட்கெல்லாம்
காத்திமுலன்பியாவாம் தெளிந்து

அநுபல்லவி

விளங்குஞ்சிந்தை துலங்குமாசது ரங்கவிபூரணமான
காத்திமுலன்பியாவாம் நபிகட்கெல்லாம்
காத்திமுலன்பியாவாம் தெளிந்து
பொருத்தயீமான் திருத்தமாமது ரங்கவிபூரணமான
காத்திமுலன்பியாவாம் நபிகட்கெல்லாம்
காத்திமுலன்பியாவாம் தெளிந்து
துதிக்குஞ்செந்தமி ழுதிக்குமேநக ரங்கவிபூரணமான
காத்திமுலன்பியாவாம் நபிகட்கெல்லாம்
காத்திமுலன்பியாவாம் தெளிந்து

சரணம்

மொழிந்துரைத்தனர் சங்கீதபாகன்
மோனவருங்குரு சிங்கார மோகன்
தெளிந்தசத்திய வாக்கதுவாகன்
தேசப்பிரபல்ய காசிமேயோகன்
மதிவழிஞானத்தின்யூகன் வஹ்தத் விவேகன் தெளி

## 28 இராகம் தேசிகதோடி தாளம் ஆதி

தாதான போலுதாரா வென்ற மெட்டு

பல்லவி.

பாவரக்ஷா ஹமுஹம்மத் பாவரக்ஷா

அநுபல்லவி.

அப்துல்காதிரே பக்திநாதரே பாவரக்ஷா

சரணம்

ஆராதரமறிந்த அண்ணல்குரு நாதரொலி
மோட்சந்தந்தெனை மீட்சியாகவே
காட்சிகண்டிட தேர்ச்சிசெய்தாளெனை பாவரக்ஷா

தொகையறா

அத்துவித சித்தியாயவதரித்திவ்வுலகில
லகமிய மருளுங்கோமான்
அணியெலாம் புகழ்மிக்க ஆரிபானவர்கள்குல
ததிசயமானசீமான்

சரணத்தொடர்

கற்றவர்போற்றும்ராஜர் நித்தமுந்தோற்றும்வாசர்
கண்மணிச்சுடராமிவர்பதம
காசிமுக்கருளாக்கிநற்குல பாவரக்ஷா

## 29 இராகம் தேசிகபியாக்தாளம் ஆதி

முஹம்மதலி ஷௌக்கத்தலி யென்ற மெட்டு

பல்லவி.

முஹம்மதப்துல்காதிரொலி ஷாஹன்சாசொல்லே
முற்றும்கவரெத்தன மொழியது வழியே செல்லே
ஆத்மமாகே றியே மிகப் போமறிசெய்யும் ஆழியே பெரும்

அகமிய மருள்குருவாய் அவனிமீது நிதியே — முஹம்மதப்
பிறவித்துன்ப மறுத்தெறிந்த பிறவிச்செல்வமணியே இனி
பிறவியாவதே நமக் கில்லையெனத் துணியே
தனையறிந்தபுத்ரன் உள் நினைவறிந்தசித்ரான் மிக
ஆவியினை மேவியதை ஜீவனைய முத்ரான் — முஹம்மதப்
கருத்தறியவேணுமதைக் காமிலொலி நுகர்ந்தார் — அதின்
ஹாதி நவ நீதிமுறை காசிபலெப்பை பகர்ந்தார்
கண்ணியவுதாரன் புகழ் கண்ணிபஷிஸ்தாரன் நறு
வாசமுற்றிட நேசம்பற்றிநின் ரேஷசயாம் சம்பூர்ணன் முஹம்

## 30 லாவணி

யஹமதியர்குலத்தில் மாணிக்கமா யென்ற மெட்டு

பல்லவி

அருஷில்கபுசோடேரி — ரகசியம்பேசிவந்த
அஹமது நிரசூலாம் அவருரைகள் ஆலமுழுதுமேலாம் — அரு

அநு பல்லவி.

எழும்புஞ்சுவாசமது யிருக்குந்தலமறிந்து
ஏற்றியிறக்கும்வழி யெல்லோருமறிந்திட
மாறறிப்பிடிக்குமுறையே தாம் தநுர்த தகுதிகு
தொகுர்த தொகு தொகு சுந்தரீ ஜெம்தரீ
ஜெகுகுண குணஜெகு சந்திரசூரிய கலையாய் சுழிமுனையில்
வந்தே பிரிந்தையுமே — அருஷில்

தொகையரு

காசிநுனி நயனமிடை நடனமிடு சுட்சமது
நல்மகா மஹம்மூதாவாம்
நற்றுனன் காடமிகளசைனியெனு முற்றுன
நாமமதை யறியோதுவாம்

பல்லவித்தொடர்

ரேசகபூரகத்தில் நிர்ச்சுயகும்பகமாம்
நிலைக்குஞ்சுயப்பு மதுவாம் — நித்திரை வந்தால்
நினைவுமதற்குள் ஒளுறைவாம் — அருஷில்

நாளொன்றுக்கிருபத் தோராயிரத்தறுநூறாய்
நடக்குஞ்சுவாசமதிலே பன்னிருகாலாய்
நால்கழிந் தெட்டுள திலே
இந்தக்கணக்கறிந் தியங்கும் பெரியோர்கட்
கின்பசுகமழிக்கு மென்றைக்குங் காட்சிபெற
ஏகன்றருமத்துண்டு  தாம் தகுர்த தகுதிகு
தொகுர்த தொகு தொகு சுந்தரீ ஜெம்தரீ
ஜெகுகுண குணஜெகு
சரத்தின்சணக்கறிந்திட்டால்  தசவாயு வெல்லாம்
சமரசமாகுங் கண்டீரே  அருஷில்

சமரசமாயிருக்க சரமதாயீருரோடும்
சார்ந்துநடக்கும்போதிலே பதினாறாகும்
தரணியோட்டத்தில் முப்பதாம்
நித்திரைமுப்பத்தாறும் நிறைபோகம் மெட்டெட்டாம்
நித்தங்கணக்கறிந்து நிலைப்படசெய்துகொள்ள
நினைவைத்திருத்திப்பாருமே  தாம் தகுர்சதகுதிகு
தொகுர்த தொகு தொகு சுந்சரி ஜெம்தரி சேகுணகுணசேகு
திருவிளையாடும்சாமே சேதமில்லாமல்
லாக்கியறிந்துகொள்ளவே  அருஷில்

தொகையறா

பஞ்சபூதப்பிரிவைப் பகர்கின்ற தன்மையது
பார்த்தறிந்திட்ட முறையாம்
பாரொன்றரையொன்றே காலப்பு தேய்வுமுக்காலும்
வாய்வொன் றாகாசமறையாம்

பல்லவித்தொடர்

பிரிதிவிமேபாயும் வலமப்புத் தேய்விடமாம்
வாயுநேராகாசமேலாம் செய்யதுமுகம்மது
காசீமுரைத்த கவியாம்  அருஷில்

## 31 இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

ஓரடிச்சந்தம்

தென்காசிவாழ் முஹியுல்லாசா வென்றமெட்டு

பல்லவி

மங்காப்புகழ்பெருகுநாதா வுந்தன்
மஃறிபாப்பெறமுறை யொளிமதியுடுவரை மங்கா

அநுபல்லவி

வந்தவழியறிந்து சிந்தைதனிற்றெறிந்து
சத்தியபுத்தியைச் சுத்தியாய்வைத்திட
பக்திவைராக்கியம் மெத்தநடத்திட மங்கா

சரணம்

சொன்னார் ஹபீபிரசூலுல்லா ஸ்தூலப்பிரபந்தம்
மன்னுகந்தபடிநல்ல ஷரஹின்வழி
நன்னுகவேநடந்துசெல்ல வாமுறையைய
முன்னோருரைத்தபடிவல்ல அருள்பெருக
ஹாதிமுதநாட்டமாற்ன் றேட்டமுடனநல்வழியே
குன்னென்ற சத்தம் பிறக்க
குல்லுவகையெல்லாமுண்டாய் வல்லோனாட்ட முங்கிருபை
மன்னனுவந்தபடியே
வல்லர சவுந்தா மிருந்த பலகோடிகளும்
பொன்னின் பணிகள்போல
நல்லவசமாய்ச்சனமந்து குல்லுமன்னனுஹக்கு
முன்னிலைக்கழிவின்றி
எப்போதிருந்தபடி யொப்புமையில்லாமலே
யேகமது மெய்யோகம்
முப்பொருளுமாயிலங்குஞ் செப்பரியநேர்மையது
வாகும் ஷிறுக்கடங்கலகும்
வாசிவெம்பரியை நேசியுட்கமல
நாசிவழியேறில் நேசிநால் நிறைய
யாசிநல்மனதால் யோசிதனனிலமை
மனனஞ்சாதித்து மெஞ்ஞான
வீதியானபரஞ் சோதியாய்விளங்கும்
நீதியின்கலிமா ஓதித்தவம்புரிய

ஹாதியாயுகித்த கோதிலாதகுரு
நாதர்வெகுதவ விநோதர்
புடவிதனிலமரர் படியும்பதமுடைய
வடிவுகிரந்தெழுகு நெடியபுகட்குரிய

நேசநல்லாசர் விசுவாசர் பவ
நாசர் கதீஜா பதியுநந்த வீசர்
வேதந்தனையறியும் ஜகமகிழ் தடமுடி

புகழுடை மடமயில் வடிவுநிறந்திட
ஜெயசரீ சுந்தரி தகுர்த தகு திக ஜெகுசணதரிகிட
ஜெகுணவென தாளமுல்லாச பேளம்
சத்கம்பிறந்தலக்கையறிந்தகற் சுக்கஜீவமெனத்தோணும்
முன்னத்தனுரைத்த நற்றவமானதென்
றறிந்துலகத்தினிற் பேணும் உயிர்கள் முற்றுஞ்
சத்தமே சஞ்சல ஸ்தாபனமில்லையென

தரணியினுறுவஸ்துக்கெல்லாம் சத்தமேநன்ருய்
அகமகிழ்க்தொனிதிகள் வாசனுப்பொரும்புகள்
நரைகமழ்ந்திடவோசை முழங்கிட வீசும் ஹயாத்தினுட்டம்
மாட்சிமை குட்சியம் நேர்ச்சியாய் வாய்த்திட

இல்லற மதிலிருந் துறவறந் தேடினீராறுல் செல்வமிகுத்த
மார்க்கவைராக்கியர் எவல் விலககல
தெரிந்து நடந்து தொழுகை யெடுத்தமற் செய்வாய்
அர்புதக்கவிமாவிற்பன அகற்றியுநற்பகா நிறுத்தி
பற்பலசொற்பொருள் விற்பன ரானவர்

தற்பரனென்றதை யுற்பனமாயுற பேசகம் நினைப்புறுத்தி
இல்லைப்புகட்டி யெங்குங்கீர்த்தியாய்
இலங்கும்பொருளறிந்தே கேர்க்கியாய்
பாலசற்குருநாசீமே கீர்த்தியாய்ப்
பார்க்குமகுமான் கிருபை நல்மூர்த்தியாய் மங்கா

## ௬2 இராகம் தேசிகா தோடி தாளம் ஆதி

தையலே தவத்திலுறை கண்மணியென்ற மெட்டு

### பல்லவி

| | |
|---|---|
| அண்ணலே யறிவுணர்த்து மெஞ்ம்பிரான் | அரு |
| ளாகத்தவம்புரிந்தோன் குன்ம்ப்ரான் | அண்ண |

### சரணநுபல்லவி

| | |
|---|---|
| வல்லவனின் வேதத்தே | வழியறிந்ததீதத்தே |
| நல்லறிவைப்போதித்தே | நபிஹுதீனைச்சோதித்தே |
| சொல்லுமுறைநாதத்தே | சுடர்விரியுங்கீதத்தே |
| சூல்லுமவன்பாதத்தே குறிப்பறிந்துசாதித்தே | |
| வீசுமலர் வாசமதாம் | அதையறிய |
| வேணுமெனப்பேசினர்காண் | வீசும் |
| வாசமெங்கிருந்துவந்த | வகைவிபரம் |
| வல்லவரறிந்திடுவார் | வாசம் |
| வீசாமற்போனவிடம் | இவடமென |
| விபரமதறியவேணும் | அப்படி |
| ஓசையெதெழும்பிவரும் | தலமதை |
| உற்றறியவேணுமென்றார் | அத்தலம் |
| சத்தப்பிறந்திடம் சுத்த ஜீவமென | |
| கற்றபெரியோர்கள் நித்தமு மோதினர் | அண்ண |
| ஞாலமதிலுற்றிடும் | ஞாயமதைகற்றிடும் |
| கோலமதைப்பெற்றிடும் | கொண்டுவந்தகற்றிடும் |
| காலமெலாமுற்றிடும் | கருமூளையிற்பற்றிடும் |
| சாலநூஹால்குதூசும் | தாமரைபோய்பொற்றிடும் |
| தில்லதிலேவீற்றிருக்கும் | ஜீவாத்மாவந் |
| தியங்கியொடுங்கிநிற்கும் | இது |
| சொல்லுமவஸ்தையஞ்சில் | நித்திரையும் |
| சொற்பனமதாகுமென்றார் | இவை |
| நல்லருக்குமதேகமாம் | எங்குஞ்சென்று |
| நாடினதறிந்துகொள்ளுமாம் | அது |

சொல்லுமிடஞ்செயலதுவும்        அறிந்தபடி
இல்லில்லவர் தமைந்திடுமாம்        அமைந்து
கத்தனறிந்திட சித்தந்தெளிந்திட
[illegible]த்தம்பிறந்திட மெத்தவருந்திட        அண்ணே

---

## 33 இராகம் தேசிகம் தாளம் ரூபகம்

வந்தே மாதரமே யென்ற மெட்டு

பல்லவி

தந்தாரிருகதமே தாசனுக்கோர் சதமே        தந்தா

அநுபல்லவி

செந்தாமரை நிகற்ப செய்யிதிறகுனுல்லா        தந்தா

சரணம்

ஸ்தூலசரீரமதை சூட்சமத்திலாக்கிட
சூட்சமதறிந்தபின் அடர்காரணமாக்கிட
கோலமற்ற காரணங் கொண்டறிவதாக்கிட
கொண்டுவரும் ஜென்மத்தைக் கூடாதெனப்போக்கிட
தெரிந்தபெரியோர்களின் வாக்காம்        எல்லாம்
அறிந்த ஆரிபீன்கள் நோக்காம        அருள்
சொரிந்தபுருகாணின் போக்காம்        அதில்
விரிந்த சரிதையடக்காம
நாதனருள்தந்த நாமமதைப்பாடும்
போதமதை நாடும் புண்யமவர்க்கு கூடும்        தந்தா

தொகையறா

ஞானியெனப்பேச்சை நாடாதிருந்திடென
நவின்ற பரிபூரண நாதா
தானி தனித்தவகை அவறிடா தமமுயற்சி
தன்னையறிவுரைத்த நீதா
மேலோனவின்மறை        விண்டபடியுற்றிடும்
ஏவல்விலக்கல்கள்        வியாமறிந்தாற்றிடும்
பாலகடக்குமுறை        பகர்ந்தவழிபெற்றிடும்
பாக்கியமாநபியின்        பதச்சரணமுறநிடும்
ருஷரியத்தவலையதையோசி        அதின்

நுட்பமறிந்தவரை நேசி — அவர்
ரூஹின்னதென்றுரைப்பர் பேசி — இதை
நூருல் இலாஹியென ஆசி
நாமென்றதைப்பாரும் — நல்வழியிற்சேரும்
ஹூவென்றதைக்கூறும் — குல்லுமொன்றாய்ச் சேரும் — தந்தா

---

## 34 இராகம் அமீர்கல்யாணி தாளம் ரூபகம்

ராஜஷிசுபாசலாலா வென்ற மெட்டு

பல்லவி

நாதரிருபாதந்தாதா நபிநிதியே தாதா நபிநிதியே

அநுபல்லவி

லோகாபிமானி நோக்கமௌனஞானி — நாதரிரு

தொகையறா

வாசாமகோசராம் வாருதிபோல்வந்த
வஹதத்து வள்ளல் நீயே
வானவர் தினம்வந்து வசனிக்கும்நாதனாய்
வண்மையுறு போதநீயே

பாட்டுத்தொடர்

சிந்தைதெளிந்த திருவசனந்தனைத்
தந்து புகழ்ந்திட வுந்திதலந்தனை
முச்சுளிவட்டமாகி மூலமாகும் மத்தியாகி
நாதரிரு பாதந்தாதா நபிநிதியே — நாதரிரு

தொகையறா

இருலோகசர்தாரா யென்றும்பிரகாசராய்
இலங்கும்பரிபூரண நாதா
எந்நேரமுங் கிருபபாதமே கெதியென்று
எதிர்பார்க்கவந்த நீதா

பாட்டுத்தொடர்

முந்தியுதித்த முஹம்மதே யுந்தனை
சிந்தையிலெப்போதுசந்தனக்கீர்த்தனை
காசிபலெப்பைபாடி தேசகலந்தேடி
நாதரிருபாதந்தாதா நபிநிதியே — நாதரிரு

## 35 இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

காந்திசன்னியாசி யென்ற மெட்டு

பல்லவி

காசிமுஸ்தபா நம்மைக்—காக்குமூர்த்தலா காத்தம்நபி காசி

அநுபல்லவி

கடல்சூழுலகத்திலே காருண்யநாடதிலே
மடல்விர்மத்தியிலே மக்கமாநகரத்திலே காசி

ஹாஷீம்கிளையதிலே காக்குரைஷிவம்சத்திலே
பாசீன்நபியொளிவை யாமீனுஞ்சரதநிலே காசி

சேயாயுதித்துவந்த தீரவீரரெங்கள்நபி
மாயக்குபிரருத்து மன்னுமிஸ்லாமாக்கிய காசி

சொந்தமாயானநபி சோபனமாமவுலூதை
சந்தோஷமாயோத சர்தாரிப்போவருவார் காசி

மாணின்பிணைமீட்டிய மஹாராஜர் நந்நபிமேல்
மானிடராம் நாங்களோது மௌலூது மஜ்லிஸிலே காசி

எங்கள் துஆகபூலாக்கி யீடேறச்செய்வதற்கு
சங்கையாமுஹம்மதுவும் ஜல்தியிதோவந்திட்டார் காசி

---

## 33 இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

மாமதி பிருமசாரி யென்றமெட்டு

பல்லவி

நாகமதென்னவம்பேசி—நஜ்சாக்கிடாமல்லைதவிசி நாகம

அநுபல்லவி

மறையே மறையே நேசி நாகம

சரணம்

அதிவிதகருமலர் பெருமணவாசி
பதித்தோம் துதித்தோம் யோகி நாகம

ஒருவனன்றியே பலதாக்கி மதியாத்
தணிப்போம் செணிப்போம் நிதியாய் நாநம

மறைவானபுனதயலாய் மவுஜூதுதாத்தாய்
மருவாயுருவாய்த் தோத்கா நாநம

கதிருக்கொரளியென காசீர்கவியாம்
கண்டேன் விண்டேன் புவியாம் நாநம

—:0:—

## 37 இராகம் அமிர்தகல்யாணி தாளம் ஆதி

யாபஞ்சத்தன் பஜாஞு என்ற மெட்டு

பல்லவி

நண்பன் நன்னெறதமிழ்வாசன்
நாடெங்கும்பிரபலநேசன் நண்பன்

அநுபல்லவி

சமானிசுலாமையுரைத்தார்
எல்லோர்க்குமனியம் நிறைத்தார்
உத்தேமாககனியதை விளைத்தார்
இருந்தார்க்குபிரசற்றி மறைத்தார் நண்பன்

நானெனும் வேறெனும் ஷருத்தே
நாடிடாமலதைத் வெறுத்தே
மெஞ்ஞானமென்றதைப்பொறுத்தே
எமக்குரைத்த மறையதின்கருத்தே
தத்துவமறிபக்கேளும் தனிதகோனனிடம்மீளும்
பத்தமடையிலில்வாழும் பாவாகாமெந்நாளும் நண்

———

## 38 சுவாமி விவேகானந்தமென்ற மெட்டு

இராகம் தேசிக கபமாஸ் தாளம் ஆதி

பல்லவி

சாஹிப்சதானந்தம் சர்வவியாபிமானந்தம் சா

அநுபல்லவி

சத்தி சித்தி முத்திஞானம் சர்வரூபநாமமான சா

சரணங்கள்

தானாய்த் தனித்தவனை தன்னம் தனியவனை யருளாளனை
சிந்தைதனில் யிருத்தி தினமும் துதிபொருந்தி
தன்மமதைத் துறந்து தவம்புரிந்தார்
சத்தி சித்தி முத்திஞானம் சர்வரூபநாமமான சா

சுந்தரமலர்பதத்தை தந்திடுமென்பவத்தை தீரத்துவைக்கும்
சித்திங்குப்காசிம்சொல்லை முத்திக்கோளப்பொழுதும்
வெற்றிகொடி கொடுக்கும் வீரஞானம்
சத்தி சித்தி முத்திஞானம் சர்வரூபநாமமான சா

---

## 33 பதம் இராகம் தாளம் ரூபகம்

சங்கையாம் நபிபேரில் சலவாத்தை
சந்தோஷமாய் நீயோதுவாய் அதின்
விந்தையதாக நீ சாதுவாய் இறை
யானவன் பேசுமி நானுமென் மலக்கானவர்களும்
மோதினேமதை சங்கை

ஆதிநாளையிற் ஆதம்மொழிந்தது
ஹவ்வாவுக்கு மகசாச்சே அதின்
சூட்சமறிந்திடலாச்சே அப்போது
காயகன்றி நவாசப்படி நேசமுற்றிட வாசம்பெற்றிட சங்
மானிடர்களொருசலவாத்தோத
மன்னேன் பத்தோதிடுவானே அதின்

மகிமையுமப்படித்தானே மறை
போதுமநன்மொழியான சலவாத்தை
போதுமபடிசொன்னான் சோதிநபிபேரில் சங்

எவ்வணக்கமும் நான்செய்தே நீங்கள்செய்
யென்றுமிறை சொல்லிநலேயே ஏகன்
இந்தசலவாத்தைசொல்லியே அதின்
அகமிபக்கருத்தானதெவ்விதம்
அருளும்நபமிறசூலின் மனுகரின் சங்கை

ஆதமோதின பத்துசலவாத்தும்
ஹவ்வாவுக்கு மஹராகினால் அப்போ
தெங்கள்நபி யொளிவாருமே அது
போதுமென்றுஹவ்வா பொருந்தின
புதுமையீதென வறிந்திட நீ சங்கை

ஆதியோதிய வேதமுறைத்தது
அருமைசலவாத்தானதால் அதின்
பெருமைய'விவை முற்றியானதால் செய்த
கவிகள்முற்று மிப்புவியிலோர்ந்திட
காசிலெப்பை பலமுற்றுந்தீர்ந்திட சங்கை

மெய்ஞ்ஞானக் கீர்த்தனை
முற்றுப்பெற்றது.